மெழிச்செல்வம்

MADRAS RECORD OFFICE
7 - JUL 1964
MADRAS

சோபகிருது ௵ • பங்குனி ௴

சென்னையில் உலக சைவ உணவு உண்ணுவோர் காங்கிரஸ்.

(8–3–64 முதல் 9–3–64 வரை.)

உலக சைவ உணவு உண்ணுவோர் மாநாட்டை ஒட்டி சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற கண்காட்சியில் தமிழ்நாடு விவசாயத் துறை அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் உணவு. பழரச வகைகளை பார்வையிடுதல்.



காய்கறி கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த காட்சிப் பொருள்களை தமிழ்நாடு விவசாயத் துறை நெறியாளர் அமைச்சர் அவர்களுக்கு விளக்குதல்.

மேழிச்செல்வம்

❊

நாட்டிற்குத் தேவையான அந்நியச் செலாவணியை ஈட்ட வாழை பயிரிடுங்கள் !

•

ரஷ்யா போன்ற வெளிநாடுகளுக்கு வாழைப்பழம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ஜப்பான் மற்றும் சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் தமிழ்நாட்டு வாழைப்பழத்திற்கு நல்ல கிராக்கி இருக்கிறது.

ஆகவே, பாரத நாட்டின் அந்நிய செலாவணியை ஈட்ட வாழை ஏற்றுமதி முக்கியமானது.

கன்றுகள் நட சிறந்த பருவம், ஆடி, ஆவணி, மார்கழி, தை.

சிறந்த குலைகளை ஏற்றுமதி செய்ய, நல்ல ஆரோக்கியமுள்ள கன்றுகளை நடவேண்டும்.

பனாமா அல்லது வாடல் நோய் தாக்காத தோட்டங்களினின்று விதைக் கன்று எடுக்க வேண்டும்.

"பனாமா" நோய் தாக்காத "பூவன்", "மோரீஸ்" அல்லது "குள்ள வாழை" ரகங்களை பயிரிடுவது சிறந்தது.

"செரசான்" கரைசலில் நனைத்து எடுத்த கன்றுகளை நட வேண்டும்.

5 டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் அடியுரத்தறதுப் பின் 570 கிலோ அம்மானியம் சலபேட் அல்லது சி. ஏ. என். அல்லது ஈடான தழைச்சத்து உரமும், 200 ராத்தல் சூப்பர் பாஸ்பேட்டும், 190 ராத்தல பொட்டாசியம் மூயுரியேட் உரமும் போடவேண்டும்.

"வாடல் நோய்" தாக்குண்ட செடிகளைக் கிழங்கு கன்றுகளுடன் அப்புறப்படுத்த வேண்டும்.

நோய் நல்ல வாழைக்கும் பரவாதிருக்க ஒரு சத செரசான் கரைசலைத் தெளிக்க வேண்டும்.

செழிப்புடன் வளரும் வாழைகள் இந்நோயை எதிர்க்கும் சகதி ஓரளவு கொண்டுள்ளது.

வருவாய் பெருக்க வாழை பயிரிடுங்கள்.

❊

வெளியிடுபவர் :

தமிழ்நாடு விவசாயத்துறை நெறியாளர், சென்னை-5.

வருட சந்தா	ரூ. 3-00.
தனிப்பிரதி	ரூ. 0-25.

உள்ளுரை

பக்கம்.

என் நமக்கு மெட்ரிக் அளவுகள் அவசியம் .. 5

பொறுக்கு வித்துக்கு நற்சான்று .. 7

குறுகிய கால கேழ்வரகு விரும்பும் விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி 7

இராமேஸ்வரம் தீவில் தென்னை அபிவிருத்தித் திட்டம் 8

தென்னைக்கு நீர் பாய்ச்சி நிறைந்த லாபமடையுங்கள் 10

சென்னை மாநகர காய்கறி விளைச்சல் போட்டி .. 10

வானிலை முன்னறிவிப்பு 12

"உதயான் பண்டிட்" பட்டத்திற்கு அகில இந்திய பழச் சாகுபடி போட்டி 13

மிளகாயைத் தாக்கும் பூசண நோய்கள் .. 14

மேழிச்செல்வம் சந்தாதாரர்களுக்கு நினைவூட்டுகிறோம் 16

விவசாயச் செய்திக்கதிர் 18

ஏ. எஸ். டி. 12 ஒட்டு ஆனைக்கொம்பன் (ஒரு புதிய வெளியீடு.) .. 19

திருவூர் நெல் ஆராய்ச்சிப் (பண்ணையின் விவசாயிகள் தின விழா).. 19

கருவேப்பிலை மரத்தைத் துளைக்கும் புழுவும் அதன் தடுப்பும் 20

புகையிலையின் கருந்தண்டு நோய் 22

நிலக்கடலை விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் ஒரு எச்சரிக்கை ! 22

சென்னை மாநில வர்த்தகப் பயிர்களின் 1964-ம் ஆண்டு பிப்ரவரி மாத விற்பனை நிலைமையைப் பற்றிய விவரம் 23

வெற்றிப்பாதை (விவசாய விளம்பர நாடகம்) .. 28

1964-ம் ஆண்டு ஜனவரி மாதத்திய கால நிலை அறிக்கை 30

விளம்பரங்கள் :

வால்டாஸ் லிமிடெட் 4

தி பெனின்சுலர் போன் மில் 7

டாடா பைஸன் அண்டு ராலிஸ் 11

சேலம் நர்சரி கார்டன்ஸ் 13

கிர்லோஸ்கர் ஆயில் என்ஜின்ஸ் லிட்., .. 15

டி. ஏ. வி. பி. 17

ராஜா பண்ணைத் தோட்டம் 19

நாட்டின் பாதுகாப்பு 21

பொட்டாஷ் 27

இரண்டு திறமை மிக்க கருவிகள்

பண்ணை வேலைகளில் மேலும் சிறந்த சிக்கனத்திற்கும், அதிகமான விளைச்சல்களுக்கும்



டிராக்டரில் பொருத்தப்பட்ட வட்டமான ஆப்ஸெட் (OFFSET) பரம்புச் சட்டங்கள்

டிராக்டரில் பொருத்தப்பட்ட வட்டமான ஆப்ஸெட் பரம்புச் சட்டங்கள் செப்பனிடப்படாத கரடுமுரடான பாதைகளிலும், பழத்தோட்டங்களிலும் திறந்த வெளி நிலங்களிலும் திறமைமிக்க சேவை அளிப்பதற்கென அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை சிறந்த முறையில் புல்பூண்டுகளை வெட்டி, மண்கட்டிகளை உடைத்து, மண்ணைப் பொடியாக்கி, அதில் காற்றுப் புகும்படியாகச் செய்கின்றன. இவற்றின் தனிப்பட்ட தன்மைகளைப் பாருங்கள்.

1. எல்லாவிதமான பிரமாண்டமான முப்பொருத்த இணைப்புகளிலும் பொருந்தும்படியாக அமைக்கப்பட்டிருக்கிறது. (அது எந்த உருளும் டிராக்டரானாலும் சரி)
2. வளைவுகளில் வெல்டு செய்யப்பட்ட வலுவான எஃகுச் சட்டம்.
3. இறக்குமதி செய்யப்பட்ட, உஷ்ணத்தில் பதனிடப்பட்ட வட்டத்தகடுகள்.
4. நிச்சயமாக ஆழமாக ஊடுருவிச்செல்லும் தன்மை.
5. கரடுமுரடான பூமியில் வளைந்துகொடுப்பதற்கேற்ப இணங்கிவரும் ஸ்ப்ரிங் பொருத்தப்பட்ட மேல் இணைப்பு.

மேலும், 14 முதல் 50 ஹார்ஸ் பவர் கொண்ட எந்த டிராக்டருடனும் பொருந்தும் இணைப்பு வகைகளும் கிடைக்கும்.

டிராக்டர்களில் பொருத்தப்பட்ட, நிலத்தைப் பண்படுத்தும் இயந்திரங்கள் (கல்டிவேடர்ஸ்)

டிராக்டர்களில் பொருத்தப்பட்ட, நிலத்தைப் பண்படுத்தும் இயந்திரங்கள், இந்தியாவில் பரந்த அளவில் மாறுபட்ட மண்ணின் தன்மைகளுக்கேற்றபடி அமைக்கப்பட்டிருக்கின்றன. லேசான மண்முதல் அடர்த்தியான மண்கள்வரை எல்லா மண்களிலும் உழுவதற்கான பற்பல தேவைகளைப் பூர்த்தி செய்யும் வெவ்வேறு மாடல்களில் கிடைக்கும். நீரியல் விசையும் (ஹைட்ராலிக் லிப்டு), முப்பொருத்த இணைப்பும் கொண்ட, 14 முதல் 50 ஹார்ஸ் பவர் கொண்ட உருளும் டிராக்டர்களுக்கேற்ற வெவ்வேறு அளவுகளில் கிடைக்கும்.

முழு விவரங்களுக்கு எழுதுங்கள்:

VOLTAS

வால்டாஸ் லிமிடட்

எர்த் மூவிங், மைனிங், அண்டு அக்ரிகல்சரல் டிவிஷன்,
டாக்டர் அம்பேட்கர் ரோடு, சின்ச்போக்லி, பம்பாய்-33

கல்கத்தா . மதரூஸ் . புதுடில்லி . பங்களூர்
கொச்சின் . அஹமதாபாத் . ஸெகந்திராபாத்
பாட்னு . நாக்பூர் . போபால்.

VOL. 618 A TAMEVEREST

மலர் 21 | சோபகிருது ஹூ பங்குனி மீ 1964—மார்ச்-ஏப்ரல் | இதழ் 3

ஏன் நமக்கு மெட்ரிக் அளவுகள் அவசியம்?

ப. ராமலிங்கம் செட்டி, பி. எஸ்சி. (விவசாயம்), எம். எஸ். (டென்)

சரித்திரக் குறிப்புகள்

நம் நாட்டில் பலவகையான நிறுத்தல், நீட்டல் அளவை அளவுகள் கடைபிடிக்கப்பட்டு வந்தன. அதற்கு தமிழ் நாடும் விதி விலக்கல்ல. நாடு முழுவதும் பொதுவான நிறுத்தல் நீட்டல் அளவை அளவுகளை கடைபிடிக்காதிருந்ததால் உற்பத்தியாளருக்கும் உபயோகிப்போருக்கும் நியாயம் கிடைக்காதிருந்தது. இது ஒரு புதிய பிரச்னை அல்ல. இதை உணர்ந்தவர்களுள் முதல்வர் அக்பர் மன்னராவார். அவர் நீட்டலளவைகளுக்கு "இலிபிகரஸ்" (34"–34") என்னும் முறையை பொதுவாக்கினார். பொது அளவை முறையாவதற்கு பதில் இது எல்லாவற்றோடும் சேர்ந்து ஒன்றாயிற்று. அரசாங்கம் 1864-ல் மாநிலங்கள் தோறும் நிறுத்தல், நீட்டல் அளவை அளவுகளின் நிலையை அறிந்து ஆலோசனைக் கூற குழுக்கள் அமைத்தது. அக்குழுக்களின் ஆலோசனைகளனைத்தையும் ஓர் அறிக்கையாக 1868-ல் சமர்ப்பிக்கப்பட்டது. 1871-ல் ஆட்சிமுறையில் "இந்திய நிறுத்தல், நீட்டல் அளவை அளவுகள் சட்டம் அதிகார பூர்வமாக நிறைவேற்றப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் இச்சட்டம் பல மாநிலங்களில் அளவைகளை சீராக்குவதில் சிறிதளவே உதவிற்று. சரித்திரப் பூர்வமான சில காரணங்களால் அளவை சீராக்கு முயற்சிக்குக் கையாண்ட ஒரு சில முயற்சிகளும் கூட வெற்றியளிக்கவில்லை. வர்த்தக உதவிக்குழு சமர்ப்பித்த அறிக்கையிலிருந்தும் ஆராய்ச்சிக் குறிப்புகளிலிருந்தும் இது தெரியவருகிறது.

மாநிலத்திற்கு மாநிலம், கிராமத்திற்கு கிராமம் அதோடு மட்டுமல்ல வீட்டுக்கு வீடு வித்தியாசப்படும் அளவைகளை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்பதே வர்த்தக ஆளுநர் குழுவின் அறிக்கையில் காண்பதாகும். கிராமங்களில் கொள்முதல் நடத்தும் வியாபாரிகள் கடைபிடித்த பல்வேறு அளவை முறைகளை இன்னும் அறவே ஒழிக்க முடியவில்லை.

இவற்றையெல்லாம் கவனித்துதான் திட்டக்குழு 1955-ல் மெட்ரிக் அளவைகள் திட்டத்தை புகுத்தியது. பழம் முறைகளுக்குப் பதில் நீட்டல், நிறுத்தல் அளவை அளவுகளுக்கெல்லாம் சீரான பொது அளவுகளை கைக்கொள்ள 1956-ல் சட்டசபையில் சட்டம் நிறைவேறியது. இதனால் அளவைகளில் இருந்த தரக்குறைவு அகற்றப்பட்டது.

மெட்ரிக் அளவு முறை என்றால் என்ன ?

மெட்ரிக் அளவுகளின் எண்ணிக்கை ஒன்றாகவும் பத்தாகவும், பத்தின் மடங்குகளாகவும் இருப்பதால், நீட்டல், நிறுவை, அளவை முதலிய எந்த அளவுகளாக இருந்தாலும் வகுப்பதற்கோ, பெருக்குவதற்கோ, கூட்டி கழிப்பதற்கோ மிகவும் இலகுவாக இருக்கிறது. நம் நாணய முறையும் மெட்ரிக் முறையிலிருப்பதால் மெட்ரிக் அளவை முறைகளை நமது வணிகம், தொழிற்துறை, விவசாயத்துறை மற்றும் அயல்நாட்டு வணிகம் முதலியவற்றில் கையாளுவதும் கணக்கிடுவதும் மிகவும் சுலபம். முதல் முதலில் மெட்ரிக் முறையை பிரான்ஸ் நாடுதான் கடைபிடிக்க ஆரம்பித்தது. ஆனால் இப்போது உலகில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தாங்கள் வணிகத்தை இந்த மெட்ரிக் முறையிலேயே நடத்திவருகிறார்கள். மழையளவு, உஷ்ண அளவு, காற்றழுத்தம் முதலிய பருவநிலை அறிவிப்புகளும் இம் மெட்ரிக் முறையிலேயே அறிவிக்கப்படுகின்றது.

நம் நாட்டில் மெட்ரிக் முறை

நம் நாட்டில் இம் மெட்ரிக் முறை பல கட்டங்களாக அமுல்படுத்தப்பட்டது (1) சில தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் (2) சில தேர்ந்தெடுக்கப்பட்ட வர்த்தகங்களிலும் தொழில்களிலும் (3) சில தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்தாபனங்களில்.

1) **தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்கள்.**—இத் திட்டம், குறிப்பிட்ட சில ஜில்லாக்களிலும், டெல்லியிலும் ஆந்திராவிலுள்ள ஒழுங்குமுறை சந்தைகளிலும், பம்பாய், மத்திய பிரதேசம், சென்னை, மைசூர் மற்றும் பஞ்சாபிலும் 1958-ம் வருடம் அக்டோபர் மாதம் அமுல்படுத்தப்பட்டது.

(2) **தொழில்களும், வர்த்தகமும்.**—பருத்தி தொழிற்சாலைகள், நூற்பு ஆலைகள், இரும்பு, எஃகு ஆலைகள், கனரக பொறியியல் தொழிற்சாலைகள், சிமென்ட், உப்பு, காகிதம் முதலிய பெரும் தொழிற்சாலைகளில் முதலில் இம்முறை புகுத்தப்பட்டது.

(3) **ஸ்தாபனங்கள்.**—கீழ்க்கண்ட ஸ்தாபனங்களில் 1960 அக்டோபர் முதல் தேதியிலிருந்து மெட்ரிக் முறை கட்டாய முறையில் அமுல்படுத்தப்பட்டது.

(1) ஏர் இந்தியாவும் இந்திய ஏர்லைன்ஸும்.

(2) ரயில்வே மற்றும் எல்லா சர்க்கார் இலாகாக்களும்.

(3) நிலம் மற்றும் சுரங்க அளவீட்டுச் சம்பந்தமான எல்லா இலாகாக்களிலும்.

(4) எல்லா விஞ்ஞான மற்றும் நீர்பாசனம், மின்சாரம், வானிலை முதலியவற்றின் கணக்கீட்டு விபரங்களும்.

தமிழ்நாட்டில் மெட்ரிக் முறையின் முன்னேற்றம்

1958-ம் ஆண்டில் தமிழ்நாடு அரசியல் சட்டத்தின்படி 1960-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந்தேதி முதல் தமிழ் நாட்டில் புதிய மெட்ரிக் முறை அளவை, நிறுத்தல் நீட்டல் அளவுமானிகள் கிடைக்கும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டது. பழைய முறையிலிருந்து புதிய மெட்ரிக் முறைக்கு மாற்றிக்கொள்ள ஒரு வருட கால அவகாசமும் கொடுக்கப்பட்டது. நாடு முழுவதும் இம்முறை ஒரே சீராகப் புகுத்தப்படவேண்டும் என்பதற்காக இந்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கு இம் முறையை அமுல்படுத்துவதில் ஏற்படும் சங்கடங்களை நிவர்த்திக்க பல சலுகைகள் அளிக்க முன்வந்தது. மெட்ரிக் தராசுகள், மீட்டர்கள் மற்றும் உள்ள அளவை மானிகளை பழையவற்றிற்குப் பதிலாக வாங்குவதற்கு மாநில அரசாங்கத்திற்கு உண்டாகும் செலவில் பாதியை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. இருந்தபோதிலும் முதலில் வாங்கும்போது ஏற்படும் செலவை அந்தந்த இலாகாவின் செலவு பட்ஜெட்டிலிருந்தே மேற்கொள்ள வேண்டும். இத்திட்டத்தில் ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால் உடனே மெட்ரிக் அளவுகள் கட்டுப்பாடு அதிகாரி அதை தீர்த்து திட்டம் விரைவாக முன்னேற உதவுகிறார். இத்திட்டத்தின் முன்னேற்றத்தை இருபகுதிகளாகப் பிரிக்கலாம். ஒன்று இலாகா சம்பந்தமானவை, மற்றொன்று இலாகா சம்பந்மில்லாதவை.

விவசாய இலாகாவைப் பொறுத்த வரையில் நிறுவைகள், எடை கற்கள், தராசுகள், வேகமானிகள், அளவை நாடாக்கள் முதலியவற்றுள் 60 சதவீதம் மெட்ரிக் முறைக்கு கடந்த $2\frac{1}{2}$ வருடத்திற்குள் மாற்றப்பட்டு விட்டன.

வணிகத்துறையில் பெரும் மொத்த வியாபாரிகள் மட்டுமே மெட்ரிக் முறையை சரியாக கடைபிடிக்கிறார்கள். ஆனால் சிறு வியாபாரிகள் பழையது மற்றும் புதிய மெட்ரிக் முறை இவ்விரண்டையும் உபயோகப்படுத்தி மக்களை ஏமாற்றி வருகிறார்கள்.

மெட்ரிக் முறையினால் ஏற்படும் நன்மைகள்

நம் நாட்டில் மெட்ரிக் முறையை கடைபிடிப்பதால் பல நன்மைகள் உண்டு. ஐரோப்பாவின் பல பாகங்களிலும் இம்முறையையே பின்பற்றுகிறார்கள். இது நாடு முழுவதிலும் வணிக முறையில் ஒரே சீரான முறை ஏற்படுத்தும். மெட்ரிக் முறையில் நாணய முறை சதத்தில் இருப்பதால் கணக்கிடுவதும் செயல்படுத்துவதும் கணக்கு பதிவு செய்தலும் மிகவும் இலகுவாக இருக்கும். ஒரே சீரான அளவு முறைகளைக் கடைபிடிப்பதால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வணிகம் செழித்து வளர ஏதுவாகிறது. அங்கீகரிக்கப்படாத போலி அளவுகளைக் கொண்டு நடு மனிதர்கள் வியாபாரிகளையும் மக்களையும் ஏய்த்து பிழைப்பதையும் நாளடைவில் தவிர்த்துவிடலாம்.

மெட்ரிக் முறையை விரைவில் அமுல்படுத்தவிடாதிருக்கும் தடைகள்

எண்ணிலடங்கா பல அளவு முறைகள் நம்நாட்டில் இருப்பதே மெட்ரிக் முறை வளர்ச்சியின் குறுக்கே நிற்கும் முதல் பெருந்தடையாகும். நாட்டிலிருக்கும் பல மொழிகளும் பழக்க வழக்கங்களும் அளவு முறைகளில் குழப்பத்தை மேலும் அதிகரிக்கின்றன. வியாபாரங்களில் வாங்குவோருக்கும் விற்போருக்கும் இடையே இருந்து அதிகப்படியாக இருவரிடமிருந்தும் சுரண்டுவதனால் இரு சாராருக்கும் நஷ்டத்தையும் இடைவிடாத தொந்தரவையும் ஏற்படுத்தும் நடுவர்கள் நாட்டில் சீரான அளவு முறைகள் ஏற்படாதிருக்க மற்றொரு பெருந்தடையாக இருக்கின்றனர். நாட்டின் படிப்படியான முன்னேற்றம் அதிலும் முக்கியமாக இலக்கியத்தின் முன்னேற்றம் இதற்கு ஓரளவு தடையாக இருக்கிறது. சட்டமியற்றுவதால் மட்டும் இம்முறையை முழுமையாக அமுல்படுத்தி விட முடியாது. வாங்குவோராகிய பொதுமக்களும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

முடிவுரை

மெட்ரிக் முறை வாங்குவோர், விற்போர் ஆகிய இருசாராருக்கும் நன்மை பயக்கிறது. வாங்குவோரின் பணத்தில் மூன்றில் இரண்டு பங்கையே அடையும் விவசாயிகளுக்கு இம்முறை மிகவும் முக்கியம். கணக்கிடுவது, கணக்கு

பதிவு செய்வது முதலியவற்றில் இதனால் ஏற்படும் நன்மைகள் யாவரும் அறிந்ததே. ஆரம்பத்தில் அநேக கஷ்டங்கள் இருந்தபோதிலும், தேவையான அளவு, புதுமுறை தராசுகள், எடை கற்கள், அளவைகள் முதலியவை கிடைக்காதிருந்தும் இம் மூன்று வருடங்களில் எதிர்பார்த்ததை விட அமோக வெற்றி அளித்துவிட்டது. இம்மெட்ரிக் முறை நாடு முழுவதிலும் மற்றும் எல்லாத் துறைகளிலும் முழுவதுமாக நிறுவ சுமார் 10 ஆண்டு காலமாவது தேவை என திட்டக்குழு கணக்கிட்டிருக்கிறது. வாங்குபவர்களாகிய, பொதுமக்கள் உணவு, உடை, ஆடம் பரம் முதலியவற்றின் தங்கள் தினசரி தேவைகளை மெட்ரிக் முறை அளவுகளிலேயே கேட்டு வாங்குவதன் மூலம் மெட்ரிக் முறையின் குறிக்கோளை வெகு விரைவில் அடைவதுடன் தாங்களும் அதிக நன்மையடைகிறார்கள்.

தஞ்சை தீவிர நெல் சாகுபடி திட்டப் பகுதியில் பொறுக்கு வித்துக்கு நற்சான்று

ஐயா,

திருத்துறைப்பூண்டி கோவாப்ரேடிவ் மார்க்கெட்டிங் சொசைட்டியிடமிருந்து ஏ.டி.டி. 3, 150 கிலோ விதை வாங்கி சாகுபடி செய்தேன். ஏக்கர் 1-க்கு 1,200 கிலோ நெல் கண்டு முதல் செய்தேன். விதை நல்ல விதமாக தயார் செய்து இருந்தது.

எம். எஸ். தியாகராஜ முதலியார்.

ஐயா,

திருத்துறைப்பூண்டி கோவாப்ரேட்டிவ் மார்க்கெட்டிங் சொசைட்டியில் குருவை சாகுபடிக்காக வாங்கிய ஏடிடீ. 20 நெல் கிலோ 50. ஷ நெல் வேறு விதைகள் கலப்பில்லாமலும் பழுதில்லாமலும் முளைத்தது.

ஆர். தம்புச் செட்டி.

ஐயா,

நான் திருத்துறைப்பூண்டி கோவாப்ரேட்டிவ் மார்க்கெட்டிங் சொசைட்டியில் 50 கிலோ வெள்ளை சம்பா குருவை வாங்கி குருவை காலத்தில் சாகுபடி செய்தேன். ஷ நெல்லின் விதைகள் நல்ல முறையில் மாவுக்கு 17 கலம் வீதம் கண்டு முதல் செய்தேன். ஷ விதையில் கலப்பு ஒன்றுமில்லாததுடன் 100-க்கு 90 சதவீதம் முளைத்தது. மனதுக்கு திருப்திகரமாக இருந்தது.

பார்வதத்தண்ணி.

ஐயா,

வடவூர்பண்ணை கிராம சகாயக் முத்து வைத்திலிங்கம் செட்டியார் அவர்களிடமிருந்து 1962-63-க்கு எனக்கு தேவையான டி. கே. எம். 6. ஒட்டு 6 மூட்டைகளை வாங்கினேன். அவைகள் நல்ல முறையில் முளைத்து நடவு செய்யப்பட்டது.

பி. வேம்மையன்,
தலைவர்-பஞ்சாயத்து, வடவூர்.

குறுகிய கால கேழ்வரகு விரும்பும் விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி !

எண்பத்து ஐந்தே நாள் வயதுடைய கோ. 8 என்ற கருஞ்சுருட்டை ரகம், கோவை சிறுதானிய ஆராய்ச்சிப் பண்ணையில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு வெளியிடப்பட்டிருக்கிறது. கோ. 7 ராகியை விட வயதில் 15 நாள் குறைவு. ஏக்கருக்கு 1,100 கிலோ தானியமும், 2,200 கிலோ தட்டும் கொடுக்கிறது. இதன் கதிர் சுருண்டும் மணி பழுப்பு நிறமுள்ளதாயும் இருக்கிறது.

ஏ.கே.பி. 1, ஏ-கே பி. 2 போன்ற குறுகிய கால ரகங்களை விட 23 சதவிதம் அதிக தானிய மகசூலும் 25 சதவீதம் அதிக தட்டையும் கொடுக்கிறது.

மே—ஜூன் பட்டத்திற்கும், டிசம்பர்-ஜனவரி பட்டத்திற்கும் விதைப்பதற்கு ஏற்றது.

இதன் செடியிலும், கதிரிலும் காணப்படும் சிவப்பு, ஊதா நிறம் இதை மற்ற ரகங்களிலிருந்து சுலபமாகக் கண்டுபிடிக்க உதவுகிறது.

உரத்தில் சிறந்தது
சேவல் சின்னம் ரசாயன கலப்பு உரங்கள்
PENINSULAR BONEMILL
SEVAL BRAND FERTILISER MIXTURES
தரத்தில் உயர்ந்தது

"சேவல்" மார்க் கலப்பு உரங்களே

நமது பாரதத்தில் விவசாயத்திற்குத்தான் முதலிடம் கொடுக்கிறார்கள். அதனை பயன்படுத்துவது நமது கடமை. மகசூலை பெருக்கவேண்டும். அதற்கு இயற்கை சத்துக்கள் நிறைந்த "சேவல்" மார்க் கலப்பு உரங்களை உபயோகப்படுத்துவது அவசியம். நிலங்களின் தரத்திற்கு ஏற்ப உரங்கள் சப்ளை செய்யப் படும்.

எங்களிடமும் உங்கள் அருகாமையிலுள்ள எங்கள் ஏஜண்டுகளிடமும், எல்லாவித பயிர்களுக்கும் (மிளகாய், வேர்க்கடலை, புகையிலை, வாழை, கரும்பு உட்பட) உயர்ந்த கலப்பு உரங்கள் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள் :

தி பெனின்சுலர் போன் மில்

தலைமை ஆபீஸ் :
28/29, பவழக்காரத் தெரு,
சென்னை-1.
போன் : 23064 & 72157

கிளை ஆபீஸ் :
சுப்பிரமணியபுரம்
தபால் பெட்டி நெ. 76
திருச்சி-1.

மில் : ரேணிகுண்டா

இராமேஸ்வரம் தீவில் தென்னை அபிவிருத்தித் திட்டம்

(டி. கே. பொன்னுசாமி, தென்னை நாற்றங்கால் உதவியாளர், பாம்பன்.)

இராமேச்வரம் தீவு இராமநாதபுரம் மாவட்டத்தின் தென் கோடியில் உள்ளது, இத் தீவு, பாம்பன், தங்கச்சி மடம், இராமேச்வரம், தனுஷ்கோடி ஆகிய நான்கு கிராமங்களைக் கொண்டது. இந்த கிராமங்கள் எல்லாம் கடற்கரையோரமாக உள்ளன. இத்தீவின் பரப்பளவு சுமார் 36 சதுர மைல்கள்.

திட்டத்தின்கீழ் தென்னந்தோப்புக்கு வேலி அமைத்தல்,

மணற்பாங்கான இத்தீவு தென்னை சாகுபடிக்கு உகந்தது. வடகிழக்குப் பருவமழையும் இதற்கு மிகவும் பயன்படுகிறது. முன்னதாகவே இங்கு சுமார் 800 எக்கர்களில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இத்தோப்புகள் சரிவர பராமரிக்கப்படாததால் தேங்காய் உற்பத்தியும் மிகவும் குறைவே. மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தின் இதர கிழக்குக் கடற்கரையோரப் பிரதேசங்களில் தீர்வை விதிக்கப்படாத அதிக பரப்புடைய புறம்போக்கு நிலங்களிலும் விவசாயிகளுக்குச் சொந்தமான நிலங்களிலும் விவசாயம் செய்யப்படாமலிருக்கிறது. இந்த நிலங்களில் தண்ணீர் மட்டம் சுமார் 6 அடி முதல் 15 அடி ஆழத்தில் இருப்பது தென்னை சாகுபடிக்கு மிகவும் சாதகமாக உள்ளது. இந்த நிலங்களை சரிவர பயன்படுத்தி சொந்த விவசாயிகளுக்கும், இலங்கையிலிருந்து குடிவந்த விவசாயிகளுக்கும் போதிய வசதியளித்து தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பதன் பொருட்டு இராமநாதபுரம் கிழக்குக் கடற்கரையோரப் பிரதேசங்களுக்கான தென்னை அபிவிருத்தி திட்டம் ஒன்று இராமேஸ்வரம் தீவில் உள்ள பாம்பனில் 1959-ம் ஆண்டு அமுல் செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் பாம்பனில் தென்னை நாற்றங்கால் பண்ணையொன்று ஒரு தென்னை நாற்றங்கால் பண்ணை உதவியாளரின் கீழ் நியமிக்கப்பட்டது.

தென்னை அபிவிருத்தித் திட்டம்—பாம்பன்.

(1) நிலமில்லாத ஏழைகளுக்கும் இலங்கையிலிருந்து கடத்தப்பட்ட அகதிகளுக்கும் தென்னை நடுவதற்குத் தகுதியான சர்க்கார் நிலங்கள் விவசாய இலாகாவின் மூலம் கொடுக்கப்படுகின்றன.

(2) பாம்பனில் உள்ள தென்னை நாற்றங்கால் பண்ணை அதிக மகசூல் தரக்கூடியதும் பூச்சி நோய் தாக்காததுமான சிறந்த தென்னங்கன்றுகளை இப்பண்ணை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்குகிறது. திட்டத்தின் தேவைக்கு மிஞ்சிய கன்றுகள் இராமேச்வரம் தீவு, இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் இதர மாவட்டங்களுக்கும் விநியோகிக்கப்படுகின்றன.

(3) அந்த நிலங்களில் தென்னை சாகுபடி செய்வதற்கு தேவையான பணவசதி நீண்டகால வட்டியில்லாக் கடனாகக் கொடுக்கப்படுகிறது.

கடன் விபரம்

		ரூ.
1.	நிலம் சீர்திருத்த ..	75
2.	வேலி கட்டுவதற்கு எக்கருக்கு ரூ. 50 வீதம் 5 எக்கருக்கு ..	250
3.	தென்னை நடுவதற்கு குழிகள் வெட்ட, பாறையிருந்தால் அகற்ற எக்கருக்கு ரூ. 50 வீதம் ..	150
4.	தென்னங்கன்றுகள் எக்கருக்கு ரூ. 50 வீதம் 3 எக்கருக்கு (கன்றுகளாக)	150
5.	நடப்பட்ட தென்னங்கன்றுகளுக்கு உரம் வைக்க எக்கருக்கு வருடம் ஒன்றுக்கு ரூ. 25 வீதம் 3 எக்கருக்கு 5 வருடத்திற்கு (உரமாக) ..	375
6.	கன்றுகளை பூச்சி பூஞ்சண நோய்களிலிருந்து காப்பதற்கும் மற்ற சில்லரைச் செலவு வருடத்திற்கு ரூ. 15 வீதம் 5 வருடங்களுக்கு.	75
	ஆக மொத்தம் ..	1,075

திட்டத்தின்கீழ் குடியேற்றப்பட்டுள்ள ஒரு ஏழை குடும்பத்தினரும், அவரது குடிசையும்.

மற்றும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 30 முன்பணமாக கொடுக்கப்படுகிறது. எல்லாக் கடன்களும் கன்றுகள் நட்டு 11-வது வருடத்திலிருந்து 15 வருடம் தவணைகளில் வசூலிக்கப்படும்.

1959-ம் ஆண்டிலிருந்து 1963-ம் ஆண்டு வரை 59 குடும்பங்களுக்கு திட்டத்தின் கீழ் 174 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. திட்டத்தின் கீழ் நிலம் பெற்ற குடும்பத்தினர் மிகுந்த ஆர்வத்துடன் தென்னை சாகுபடி செய்து வருகின்றனர். மேலும் தென்னந்தோப்புகளை நல்ல முறையில் பராமரிக்க அவர்கள் அந்த நிலங்களிலேயே குடியிருப்பு வைத்து அயராது பாடுபட்டு வருகின்றனர். முன்பு காடுகளாகவும், தரிசுகளாகவும் கிடந்த நிலம் இப்பொழுது தென்னந்தோப்புகள் அடர்ந்த ஒரு சிற்றூராக உள்ளது.

தோப்புகளுக்கு ஆழமற்ற தோண்டு கிணறுகளிலிருந்து தண்ணீர் பாய்ச்சுதல்.

பாம்பனில் வெற்றிகரமாக செயல்பட்ட தென்னை அபிவிருத்தி திட்டம், 1961-ல் இராமநாதபுரம் மாவட்டக் கடற்கரையோரமுள்ள மற்ற பிரதேசங்களுக்கும் விரிவாக்கப்பட்டது. இந்த விரிவான திட்டத்தின் கீழ் பாம்பன், உச்சிப்புளி, திருப்புல்லானி, தேவிபட்டினம், தொண்டி ஆகிய இடங்களில் தென்னை நாற்றங்கால் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம், திருவாடானை, முதுகளத்தூர், பரமக்குடி தாலூகாக்களுக்கும் இந்த திட்டத்தை விரிவாக்க வகை செய்யப்பட்டுள்ளது.

விரிவான திட்டத்திற்கென இராமநாதபுரத்தில் தென்னை அபிவிருத்தி அலுவலர் ஒருவர் இருக்கிறார்.

விரிவான திட்டத்தின்கீழ் நிலச் சொந்தக்காரர்களுக்கும் தென்னை அபிவிருத்திக்காக கடனுதவி கொடுக்கப்படுகிறது. இந்தக் கடன் தொகையும் கன்றுகள் நட்டு 11-வது ஆண்டிலிருந்து 15 வருடத் தவணைகளில் வட்டியில்லாமல் வசூலிக்கப்படும்.

கடன் விபரம்

		ரூ.
1.	நிலத்தைச் சீர்திருத்த ஏக்கர் ஒன்றுக்கு — — ..	100
2.	வேலிகட்ட ஏக்கர் ஒன்றுக்கு ..	50
3.	தோண்டிய குழிகளில் பாறையிருந்தால் அதை அகற்றி குழிகள் தயார் செய்ய	50
4.	ஒரு ஏக்கருக்குத் தேவையான தென்னங்கன்றுகளை பண்ணையிலிருந்து வாங்குவதற்கு ..	50
5.	கன்றுகளுக்கு உரம் வைப்பதற்கு ஏக்கர் ஒன்றுக்கு	125
6.	பூச்சி பூஞ்சண மருந்துக்கும் இதர சில்லரை செலவுகளுக்கும் ஏக்கர் ஒன்றுக்கு	25
7.	ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் தென்னங்கன்றுகள் வைப்பவர்களுக்கு மட்டும் கிணறு வெட்ட ..	1,000

பேணிப் பாதுகாக்கும் விவசாயியும், நாற்றங்கால் உதவியாளரும்.

இத்திட்டத்தினால் தங்கள் அன்றாட வாழ்விற்கே கஷ்டப்பட்டு வரும் இராமநாதபுரம் கிழக்கு கடற்கரையோரப் பிரதேசங்களில் வாழும் மக்கள் தங்கள் சுபீட்சத்திற்கு ஒரு சிறந்த வாய்ப்பை ஏற்படுத்திகொள்வதோடுமட்டும் அல்லாமல் நாட்டின் தேங்காய், தேங்காய் எண்ணெய் ஆகியவைகளின் பற்றுக்குறையை போக்குவதற்கு ஏராளமான நிலங்களில் திட்டத்தின்கீழ் புதிய தென்னந்தோப்புகளை உண்டாக்குவதற்கு தங்கள் முழு உழைப்பின் சக்தியையும் கொடுத்து உதவியவர்கள் என்ற பாராட்டுதலுக்கும் பெருமைக்கும் தகுதி உள்ளவர்கள் ஆகிறார்கள்.

தென்னையை நட்டு நன்மையடையுங்கள்.

தென்னைக்கு நீர் பாய்ச்சி நிறைந்த லாபமடையுங்கள்

(திரு. வி. ஆர். வரதராசன், பி.எஸ்ஸி., தென்னை வளர்ச்சி உதவியாளர் அதிராம்பட்டினம்.)

தென்னைக்கு போதுமான நீர் பாய்ச்சினல் மட்டும் 20 காய்கள் அதிகமாக கிடைக்கின்றன. இதனல் வருடத்திற்கு ஏக்கருக்கு லாபம் ரூ. 325.

இளம் பிள்ளைகளுக்கு நீர் வசதி.

* நட்ட பிள்ளைகள் வேரூன்றி நிலைக்கும் வரையில் மழையில்லாத போது சரிவரத் தண்ணீர் ஊற்ற வேண்டும்.

* நட்ட முதல் வருடத்தில் ஒரு நாள் விட்டு ஒரு நாளும்.

* பிறகு பிள்ளைகள் 5 அல்லது 6 வருடம் ஆகும் வரையில் வாரம் ஒரு முறை அல்லது இரு முறை தண்ணீர் ஊற்றுவது நல்லது.

ஊடுபயிர்.

* கோடையில் வரட்சி ஏற்படாமல் இருக்க ஊடுபயிர் செய்வது ஒரு உபாயம்.

* தோப்புகளின் மத்தியில் ஆங்காங்கே சிறுசிறு கிணறுகள் (ஊக் கிணறு) தோண்டி கோடைக் கடலை (Summer Groundnut) பயிர் செய்யலாம்.

* இது தஞ்சை மாவட்டத்தில் நடந்துகொண்டு வருகின்றது.

மேலும் கோடையில் இந்த ஊடு பயிர்கள் மூடு பயிராகவும் (Cover Crop) இருந்து நிலத்தில் உள்ள ஈரத்தைக் காக்கின்றது.

பசுந்தாள் உரப் பயிர்கள்.

கொளுஞ்சி, கலப்பகோனியம் போன்ற தழை உரச் செடிகளைப் பயிர் செய்வதால் கோடையில் நிலத்தின் ஈரம் பாதுகாக்கிறது.

இப் பயிர்களை மடக்கி உழுவதால் நல்ல உரமாவதுடன் நீரை பிடித்து வைக்கும் சக்தியை அதிகப்படுத்துகிறது.

வடிமுனைக்குழாய் கிணறு.

* மணற்பாங்கான, மண் கலந்த பூமிகளில் வரட்சி அதிகம் காணப்படும். இங்கு வடிக் குழாய் கிணறுகளை அமைத்து வேண்டிய அளவு நீர் பாய்ச்சவும்.

உரிமட்டைப் புதையல்.

* இரு தென்னை வரிசைகளுக்கு மத்தியில் சுமார் 6 அடி அகலத்திலும், 1-1½ அடி ஆழத்திலும் கிடங்கு வெட்டி, உரிமட்டைகளின் (Coconut husk) உட்பக்கம் மேல் நோக்கிய வண்ணமாக குப்பை கூளங்களோடு போட வேண்டும்.

* நிரப்பப்பட்ட கிடங்குகளை மண்ணைக் கொண்டு மூடி விடலாம்.

* உரி மட்டைகள் உரமாக உபயோகப்படுகிறது.

* மழை நீரைக் கிரகித்துக் கொண்டு கோடை மாதங்களில் மரங்களுக்குத் தண்ணீர்த் தொட்டியாகவும் உதவுகின்றது.

தக்க அளவு உரம், உழவு செய்தல் தருணத்தில் பயிர் பாதுகாப்பு செய்தும், நீர் இறைத்தல் இவை நான்கும் தென்னை காய்ப்புக்கு முக்கியமானவை. ஒன்று குறைவு பட்டாலும் மகசூல் குறையும். உரிய முறையில் தென்னையைப் பேணி, நிறை விளைச்சல் பெறுவீர்.

சென்னை மாநகர காய்கறி விளைச்சல் போட்டி.

இப்போட்டி இவ்வருடமும் ஜூலை–ஆகஸ்ட் பட்டத்திலும், ஜனவரி–பிப்ரவரி பட்டத்திலும் நடத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

போட்டி விவரங்கள்.

தொகுதி 1—100 முதல் 250 சதுர அடி தோட்டமுள்ள தனிப்பட்ட நபர்கள்.

தொகுதி 2—251 சதுர அடிக்கு மேல் தோட்டமுள்ள தனிப்பட்ட நபர்கள்.

தொகுதி 3—குறைந்த பட்ச 500 சதுர அடி தோட்டமுள்ள கல்லூரிகள்.

தொகுதி 4—குறைந்த பட்ச 500 சதுர அடி தோட்டமுள்ள உயர்நிலைப்பள்ளிகள்.

தொகுதி 5—குறைந்த பட்ச 500 சதுர அடி தோட்டமுள்ள உயர்தர பள்ளிகள்.

தொகுதி 6—குறைந்த பட்ச 500 சதுர அடி தோட்டமுள்ள இதர ஸ்தாபனங்கள்.

பரிசு விவரங்கள்.

(தொகுதிகள்)

		(1)	(2)	(3)	(4)	(5)	(6)
முதல் பரிசு	ரூ.	25	40	60	40	25	40
இரண்டாம் பரிசு	,,	15	20	40	20	15	20
மூன்றும் பரிசு	,,	10	15	25	15	10	15

ஒரு வருடத்தில் இரு பட்டங்களுக்கும் போட்டி நடத்தி பரிசளிக்க செலவாகும் ரூ. 900 க்குஅனுமதி யளிககப்பட்டிறது.

இதர விவரங்களுக்கு:—காய்கறி அபிவிருத்திக்கான தனி விவசாய அலுவலர் 23, டாக்டர் ரங்காச்சாரி தெரு, சென்னை 4-யை அணுகவும்.

(அரசாங்க ஆணை எண் 616, 1964-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதி, உணவு விவசாயத்துறை, சென்னை.)



"சேவையை மதிப்பிட ஒரு சொல்"

என்ருர் டாடா.

"தூய ... சீரான ... உடனடியான" பைஸன் பிரேரேபித்தார்.

டாடா உதட்டைப் பிதுக்கினுர்.

"அமைதியான ... தனிப்பட்ட ... பத்திரமான" என்று ராலி கூறினுர்.

"ஆங்! அகப்பட்டது!" என்று கூவினுர் டாடா, கண்களில் உற்சாகம் பொங்க.

"ஒருங்கிணைந்த சேவை!"

பைஸனும், ராலியும் ஒப்புக்கொண்டார்கள்.

சரியான சொற்களைத் தேடிப் பிடிப்பதில் டாடா கெட்டிக்காரர்.

மூவரும் ஒருமிக்கக் கூறினர். "விவசாயிக்கு நாங்கள் அளிப்பது ஒருங்கிணைந்த சேவை. உரங்கள், பூச்சி மருந்துகள் வரிசையில் இந்தியாவிலேயே சிறந்தவற்றை வழங்குவதுடன், அவற்றை உபயோகிப்பதற்கான ஆலோசனைகளும் கூறுகிருேம்."

"விரிவான சேவை" என்ருர் ராலி.

"முழுமையான சேவை" என்ருர் பைஸன்.

"ஒருங்கிணைந்த சேவை" என்ருர் டாடா.

டாடா - பைஸனும் ராலீஸும் தனித்தியங்கி வந்த தங்கள் விற்பனை நிறுவனங்களை இணைத்து ஒரே ஸ்தாபனமாக்கிவிட்டனர். இனி டாடா - பைஸன் தயாரிப்புகள் யாவற்றையும் ராலீஸின் 'ஃபெர்டிலைஸர் அண்ட் பெஸ்டிஸைட்ஸ் டிவிஷன்' விற்பனைக்குக் கொண்டுவரும். இவ்விணைப்பினுல் இந்திய விவசாயிக்கு அளப்பரிய நன்மைகள் ஏற்படும். முதன்முறையாக நாடு பூராவும் பயிர் வளர்ச்சிக்கு மட்டுமின்றி, பயிர்ப் பாதுகாப்புக்கும் தேவையான ஆலோசனைகளும் தயாரிப்புகளும் இணைக்கப்பட்ட ஒரே ஸ்தாபனத்தின்மூலம் கிட்டப் போகிறது ... விவசாய முன்னேற்றத்திற்குக் குறிப்பிடத்தக்க சேவை இது என்பதைக் கூறவும் வேண்டுமா?

TATA-FISON RALLIS

டாடா-பைஸன் அண்ட் ராலீஸ்

பயிர் அபிவிருத்திக்குப் பணிபுரிகின்றது!

TREY-STAM

வானிலை முன்னறிவிப்பு

[சி. ரங்கநாதன், பி.எஸ்ஸி. (வேளாண்மை), விவசாயக் காலநிலை ஆய்வுப் பிரிவு, கோயம்புத்தூர்-3.]

வானிலை முன்னறிவிப்பு ஒரு அறிவியலாகவும் அதே நேரத்தில் சிறந்ததொரு கலையாகவும் இருக்கின்றது. நிலைத்த, நிலவன்மையற்ற சீதோஷ்ணச் செயல் முறைகளைப் பற்றிய முன்னறிவிக்கக்கூடியவற்றிற்கிடையே யுள்ள வேறுபாடு முன்னறிவிப்பின் சிறப்பான தன்மையாகும். சாதாரண மக்கள் சீதோஷ்ணநிலை எவ்வாறு இருக்கப் போகிறதென்று கவலை கொள்ளுகின்றனரே யன்றி, அறிவிப்பார்கள் அறிவிப்பினை உண்டாக்குவதற்குக் கையாளும் வழிமுறைகளைப்பற்றி கணமேனும் கருதுவதில்லை. நிலையுள்ள சீதோஷ்ண நிலையினை எளிதில் தீர்மானிக்க இயலும். அதே வேளையில், நிலையற்ற சீதோஷ்ண நிலையினைத் தீர்மானிக்கின்ற இடங்களில் எல்லாம் இடையூறுகள் பல தடை செய்வதால், யூகித்தே கூற வேண்டிய நிலை நிலவுகிறது. அப்போது நிலவுகின்ற சீதோஷ்ணத்தைப் பற்றிய நுட்பமான அறிவினை, முன்னறிவிப்பு நமக்கு அளித்துதவுகிறது.

முன்னறிவிக்க வேண்டிய தேவைகள், கிடைத்துள்ள புள்ளி விவரங்கள் இவற்றிற்கேற்ப சீதோஷ்ண நிலையினைப் பற்றிய செய்திகள் பெரிதும் மாறுபடுகின்றன. நிலப் பரப்பினைப் பற்றிய திட்டவட்டமான ஆய்வு, முழுப் பரப்பினைப் பற்றிய பொதுவான ஆய்வு, ஆகியவற்றை முன்னறிவிப்பு அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. அப்பொழுது நிலவும் சீதோஷ்ணப் பகுப்பாய்வினை அறிவிக்கப்பட வேண்டிய காலத்திற்கு விரிவுபடுத்துதலே முன்னறிவிப்பின் இரண்டாவது எளியபடியாகும். வருமுன் கூறும் பகுப்பாய்வுகளையே முன்னறிவிப்பாக மாற்றுகின்ற இறுதிநிலையே முன்னறிவிப்புகளைத் தயாரிக்கும் நிலைகளில் மிகக் கடினமான நிலையாகும். இருப்பினும் இந்நிலையே இப்பிரச்சனைக்குக் கிட்டும் தகுதியான பரிசாகும். இந்த நிலையிலேயே தரமான உளத்திறன், திறமையான காலத்தை அனுசரிக்கும் நோக்கு, தகுதியான உயர் படிப்பு ஆகியவை பெரிதும் தேவைப்படுகின்றன.

வெவ்வேறுபட்ட முன்னறிவிப்பாளர்களால் வெவ்வேறுபட்ட வழித்துறைகள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அவைகளில் ஒரு சிலவற்றைக் காண்பது பயன்தரும் பணியாகும்.

உஷ்ணநிலை.—உச்சம், நீச்சம் என இதனைப் பகுக்கலாம். உச்ச நீச்ச நிலை பற்றிய முன்னறிவிப்புகள் மலை நாட்டவர்களுக்கு இன்றியமையாத தன்மையாக உள்ளது. உஷ்ணநிலை முன்னறிவிப்புகளுக்காகப் பற்பல சூட்சமங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவைகளில் சில நுகர்ச்சியினைச் சார்ந்தவை; சில கொள்கைத் தன்மையைச் சார்ந்தவை. மாதத்தின் வெப்ப விளைவுகள், அல்லது பருவ வெப்ப விளைவுகள் ஆகியவைகள் உற்று நோக்கப்படுகின்றன. பல்வேறான அளவுள்ள மேக வகைகள், காற்றின் தன்மைகள் இவற்றிற்கேற்ப பல்வேறு விளைவுகள், கிடைக்கின்ற பதிவேடுகளிலிருந்து கிட்டுகின்ற விவரங்கள் மூலம் உருவாக்கப்படுகின்றன.

நீச்ச உஷ்ணநிலை (Minimum Temperature).—மேகக் கூட்டநிலை, காற்றின் விகித வேகம், திசை, காற்றின் நீர்த் தன்மை, நிலத்தின் அமைப்பு நிலை போன்ற பொதுவான மழையியல் எதுக்கள் இந்நிலையில் கவனிக்கப்படுகின்றன. காற்று அமைதியாக இருப்பது நீச்ச உஷ்ணநிலை நிலவுவதற்கு சாதகமானதொரு கூறுகும். வானம் இரவு முழுவதும் மேகமற்றுத் தெளிவாக விளங்குமானால் நிலப் பரப்பளவில் வெப்பக் கடத்தல் செறிவு மிகுந்திருக்கும்; இதன் விளைவாக நீச்ச உஷ்ணநிலை நிலவலாம். சூரிய அஸ்தமனத்திற்குப்பின் இரவில் பனித்துளிகள் காணப்படின் உஷ்ணநிலை நீச்சமாக இருக்கும்.

பனித்துளிகள் படிகின்றவரை உஷ்ணநிலை குறைந்த பின் மேலும் குறைவதென்பது இயலாது. பனிப் படலங்கள் படிந்து விழுவதால் பூமியிலிருந்து வெப்பக் கடத்தலும் கட்டுப்படுகிறது.

காற்றும், காற்றழுத்தமும்.—மேல் பரப்பின் இயல்பான அழுத்தமே சீதோஷ்ண நிலையைக் காட்டும் சுட்டு ஆக அமைவதில்லை. காற்றழுத்தத்தின் மாறுதல்கள், வானிலையில் நடக்கவிருக்கும் தற்காலிக மாறுதல்களைக் குறிப்பாக அறிய உதவுகின்றன. நிலவுகின்ற காற்றில் நீர்த்தன்மை (Humidity) மிகுந்திருப்பின் நெருங்கி வருகின்ற அழுத்தம், மேகக் கூட்டங்களின் நிலையினையும், மழையினையும் விளைவிப்பதாக அமையலாம். காற்று வறட்சி மிகுந்திருப்பின் வருகின்ற அழுத்தம் காற்றினை அலையடித்தலைச் செய்வதனைத் தவிர வேறெதனையும் செய்வதில்லை. மிகுந்த அழுத்தம் பெரும்பாலும் நல்ல சீதோஷ்ண நிலையுடன் இணைந்த ஒன்றாகவே இருக்கிறது.

மேகக் கூட்டங்கள்.—மேகங்களை மூன்று வகையாக உயர் நிலை மேகங்கள் (High Clouds), நடுநிலை மேகங்கள் (Medium Clouds), கீழ்நிலை மேகங்கள் (Low Clouds) என்று வகுப்பது மழையியலர்களது மரபு.

I. **உயர்நிலை மேகங்கள்**.—(5,000 அடி உயரத்துக்கு மேல்) —

1. சிர்ரஸ் (Cirrus)
2. சிர்ரோ-குமுலஸ் (Cirro-Cumulus)
3. சிர்ரோ-ஸ்ட்ரேட்டஸ் (Cirro-Stratus)

II. **நடுநிலை மேகங்கள்**.—(10,000 அடி முதல் 20,000 அடி வரை).—

1. **ஆல்டோ குமுலஸ் (Alto-Cumulus)**
2. **ஆல்டோ ஸ்ட்ரேட்டஸ் (Alto-stratus)**

III. கீழ்நிலை மேகங்கள்.— (10,000 அடிக்கும் குறைவு) —

1. ஸ்ட்ரேட்டோ குமுலஸ் (Strato-Cumulus)
2. நிம்பஸ் (Nimbus)
3. குமுலஸ் (Cumulus)
4. குமுலோ நிம்பஸ் (Cumulo-nimbus)
5. ஸ்ட்ரேட்டஸ் (Stratus)

குமுலஸ் (Cumulus) வகை மேகங்கள் அதிகாலையில் காணப்படுமேயானால் பிற்பகலில் மழை பெய்ய ஏதுவாகும். நெருங்கியமைந்த ஆல்டோ குமுலஸ் (Alto-Cumulus) அருகி வருகிற உப்பு சத்தையும் (warmth), மழையினையும் அறிவிப்பதாக அமைகிறது.

விழுகின்ற பனி அல்லது பொழிகின்ற மழை நிலவுகின்ற சமயங்களில் ஸ்ட்ரேட்டஸ் (Stratus), ஸ்ட்ரேட்டோ குமுலஸ் (Strato-Cumulus) ஆகிய மேக வகைகளைக் காணலாம். வறட்சி வருகின்றது என்று நமக்கு அறிவிக்கின்ற மேகங்கள் தான் சிர்ரஸ்ஸும் (Cirrus), சிர்ரோ-ஸ்ட்ரேட்டஸ் (Cirro-Stratus) ஆகும்.

முடிவுரை.— உழவர்களுக்குப் பெரிதும் உதவும் வானியல் முன்னறிவிப்புகளைச் செயல்படுத்தும் முறைகள், இன்று பெருகிவரும் கருவிகளின் உதவியினாலும், வளர்ந்துவரும் ஆய்வுகளினாலும் பெருமளவு முன்னேறியுள்ளன; முன்னேறி வருகின்றன. சென்னை அரசாங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் வேளாண் கல்லூரி வானிலை ஆய்வுக் கூடத்திலும், இன்னும் பிற இடங்களிலும் இது பற்றிய ஆய்வுகள் இன்னும் நடைபெறுகின்றன. வானிலையறிஞர்கள் அளிக்கின்ற அறிவியல் முன்னறிவிப்புகளை உங்கள் வானொலி பெட்டியின் மூலமும் செய்தித்தாள்கள் மூலமும் கேட்டு, தெரிந்து கவனித்துக் காரியமாற்றுவீர்களாக. அது மட்டுமல்ல, மாநிலத்தின் எல்லா மாவட்டங்களிலும் கால நிலையில் ஏற்படும் பெருத்த மாறுதல்களை முன்கூட்டியே அறிவிக்கப்படுகிறது.

அகில இந்திய வானொலி திருச்சிராப்பள்ளி நிலையத்திலிருந்து தினமும் மாலையில் ஒலி பரப்பாகும் கிராம நிகழ்ச்சிகளையும், வானிலை அறிக்கைகளையும், தவறாமல் கேட்டு பயனடையக் கோரப்படுகிறார்கள். குறிப்பாக இந் நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கான வானிலை அறிக்கையும், சாகுபடி குறிப்புகளும், பூச்சி பூஞ்சண நோய்கள் பற்றிய முன்னறிவிப்பும் அவற்றிலிருந்து பயிர்களைக் காக்க மேற்கொள்ள வேண்டிய முறைகளையும், விவசாய இலாகாவின் செய்திக்குழு தயாரித்துத் தருகின்றது. இம்மாதிரியான முன்னறிவிப்புகள் எஞ்சியுள்ள மாவட்டங்களுக்கும் இப்பொழுது அமுலில் இருக்கிறது. விவசாயிகளுக்கான வானிலை முன்னறிவிப்புகளைத் தவறாமல் கேட்டு பயனடைந்து உற்பத்தியைப் பெருக்க உதவுவீர்களாக.

—

"உத்யான் பண்டிட்" பட்டத்திற்கு அகில இந்திய பழச் சாகுபடி போட்டி

ஒரு சில பழவகைகளில் அகில இந்திய போட்டிகள் நடத்த இந்திய விவசாய ஆராய்ச்சிக் குழு முடிவு செய்திருக்கிறது. அகில இந்தியப் போட்டியில் முதலாவதாக வெற்றி பெற்றோருக்கு "உத்யான் பண்டிட்" பட்ட வெள்ளிப் பதக்கமும் ரூ. 5,000 மதிப்புள்ள சேமிப்புப் பத்திரமும் வழங்கப்படும். போட்டியின் நடுவர்கள் முதன்மையாக வெற்றிப் பெற்றோருக்கும் அடுத்து வருவோருக்கும் அதிக வித்யாசமில்லை என்று கருதினால் இரண்டாவது பரிசாக ரூ. 1,000 சேமிப்புப் பத்திரமாக வழங்கப்படும். மாகாணப் போட்டியில் முதலாவதாக வெற்றி பெற்றவரே அகில இந்திய போட்டியில் தீர்வு காணத் தகுதியுள்ளவராவார்.

மாகாண ரீதியில் முதலாவதாக மாம்பழச் சாகுபடியில் வெற்றி பெற்றோருக்கு முதல் பரிசு ரூ. 1,000 சேமிப்புப் பத்திரமாகவும், இரண்டாவது பரிசு கொடுக்க முடிவு செய்தால் ரூ. 500 சேமிப்புப் பத்திரமாகவும் வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

1964-ம் ஆண்டு மாம்பழப் போட்டி மே மாதத்தில் நடைபெறும். இப் போட்டிக்கு நுழைவு கட்டணம் ரூ. 5 மட்டும்.

இதர விவரங்களுக்கு அருகிலுள்ள மாவட்ட விவசாய அலுவலர் அல்லது விவசாய விஸ்தரிப்பு அலுவலரை அணுகவும்.

ஸ்தாபிதம் 1885

தந்தி : நர்சரி — போன் 3210

79 வருடங்களாக சேவை செய்து வரும் கான் சாஹிப் S K I. ஹாஜீ அப்துல் ரஹிமான் சாஹிப் ஸ்தாபனம்.

சேலம் நர்சரி கார்டன்ஸ், சேலம்.

புகழ்பெற்ற ஒட்டு மாஞ்செடிகள், எலுமிச்சை, தென்னை, இதர பழச் செடிகள், அலங்காரச் செடிகள், காய்கறி, புஷ்ப விதைகளுக்குச் சிறந்த இடம்.

Proprietor :

S. K. A. அப்துல் ரஜாக் சாயுபு,
சேலம் நர்சரி கார்டன்ஸ்,
செரி ரோடு, சேலம்-7
(S. India.)

மிளகாயைத் தாக்கும் பூசண நோய்கள்

[கா. சிவப்பிரகாசம், பி.எஸ்சி. (வேளாண்மை), ச. பத்மநாபன், எம்.எஸ்சி., எச். டி. லெவின் தேவசகாயம், எம்.எஸ்சி (வேளாண்மை), பூசண இயற்பிரிவு, வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சிக் கழகம், கோவை-3.]

மிளகாய் நல்ல வருமானம் தரக்கூடிய பயிர்களில் ஒன்று. இது தமிழ்நாட்டில் சுமார் 166,000 ஏக்கர் நிலப் பரப்பில் பயிராகிறது. இப் பயிரில் நல்ல மகசூல் அடைய திருந்திய சாகுபடி முறைகளைக் கடைப்பிடிப்பதுடன் ஆரம்பத்திலிருந்தே பூச்சி பூசணங்களால் ஏற்படும் அழிவினைத் தடுக்கவும் முயல வேண்டும்.

மிளகாயில் காணும் பூசண நோய்களில் பழம் அழுகல் நோய், நாற்று அழுகல் நோய், சாம்பல் நோய், வாடல் நோய் முதலியவை முக்கியமானவையாகும்.

1. பழம் அழுகல் நோய் (Fruit rot):—

இந்த நோய் எல்லா மாவட்டங்களிலும் காணப்படும். மழை காலத்தில் அதிகமாகப் பரவும்.
இதன் தாக்குதலால்,—

* பூக்கள் காய்ந்து உதிர்ந்து விடுகின்றன.

* இளங் கிளைகளில் உள்ள இலைகளும் உதிர்ந்து பின் நுனிப் பாகத்திலிருந்து அவைகள் பின் நோக்கிக் காய்ந்து விடுகின்றன.



பழம் அழுகல் நோய்

* பழங்கள் மிகுதியான சேதத்திற்குள்ளாகின்றன. பழங்களில் புள்ளிகள் தோன்றி, பின்பு பெரிதாகி வெளுத்துக் காணப்படுகின்றன. அப் பாகத்தில் சிறு கரு நிறப்புள்ளிகளும் தென்படுகின்றன.

* நாளடைவில் பழம் முழுவதும் சிறுத்து உலர்ந்து விடுவதால் அதனுடைய காரத்தன்மை குறைந்து விடுகிறது.

தடுப்பு முறை.

ஒரு சதவிகித போர்டோ கலவையைச்செடி பூக்க ஆரம்பிப்பதற்கு முன்பு ஒரு முறையும், காய்ப்பிடிப்பின் போது ஒரு முறையும் தெளிக்க வேண்டும். தேவைப்பட்டால் நோயின் தன்மைக்குத் தக்கவாறு 15 நாட்கள் கழித்து மற்றொரு முறையும் தெளிக்கலாம்.

நோய் தாக்கப்படாத பழங்களிலிருந்து எடுத்த விதைகளைப் பயன்படுத்த வேண்டும். பழங்கள் எடுத்து முடிந்த பின் செடிகளைப் பிடுங்கி எரித்து விடவும்.

2. நாற்று அழுகல் நோய் (Damping off).—

இந்நோய் நாற்றங்காலை மிகுந்த சேதத்திற்குள்ளாக்குகிறது.

* நாற்றின் தண்டுப்பாகம் தரை மட்டத்தில் தாக்கப்பட்டு நாற்று வலுவிழந்து தரையில் சாய்ந்து விடுகிறது.

* தண்டுப் பாகமும் இலைகளும் விரைவில் அழுகி விடுகின்றன.

* தரையின் மேல் வெண்மையான பூசணம் வளர்ந்திருப்பதைக் காணலாம்.

* நாற்று மிகவும் நெருக்கமாக உள்ள இடங்களிலும் அதிக ஈரம் உள்ள இடங்களிலும், வெளிச்சக் குறைவான இடங்களிலும் இந் நோயினை அதிகமாகக் காணலாம். குளிர்ந்த காலநிலை தொடர்ந்து இருந்தால் இந் நோய் விரைவில் பரவும்.

தடுப்பு முறை.

நாற்று விடுமுன்பு ஒரு சதவிகித போர்டோ கலவையால் தரையை நனைக்க வேண்டும் (Drenching). நல்ல வடிகால் வசதியுடைய நாற்றங்காலில் மேடைப் பாத்திகளில் குறைந்த அளவு விதையினைப் பயன்படுத்தி நெருக்கமில்லாது நாற்று விட வேண்டும்.

3. சாம்பல் நோய் (Powdery mildew).—

* இலைகளில் உள்ள வெண்மையான பூசணப் படிவினால் இந்நோயினை அறிந்து கொள்ளலாம்.



சாம்பல் நோய்

(16-ம் பக்கம் பார்க்கவும்)

இந்தியாவின்
பயிர்
நிலங்களிலிருந்து
அதிக
உணவிற்காக...!
டீஸல் என்ஜின்கள்
I M
கிர்லோஸ்கர் ஆயில் என்ஜின்ஸ் லிட்.,
எல்பின்ஸ்டன் ரோடு, புனா-3 (இந்தியா)

அரசினர் தென்னை நாற்றங்கால்களில் கிடைக்கும் தென்னங்கன்றுகளின் விவரம்

கிடைக்குமிடம்.	கையிருப்பு எண்ணிக்கை.	ஒரு கன்றின் விலை. ரூ.	ந.பை.
தென்னை நாற்றங்கால்—			
சோழவந்தான், மதுரை ஜில்லா.	6,500	0	65
திருப்பாறைதுரை, திருச்சி ஜில்லா.	3,000	0	65
திண்டிவனம், தென்னாற்காடு ஜில்லா.	7,000	0	65
சேலம், சேலம் ஜில்லா.	10,000	0	65
தோவாலை, கன்னியாகுமரி ஜில்லா.	2,000	0	65

(14-ம் பக்கம்—தொடர்ச்சி)

* இலைகள் முழு வளர்ச்சியடையாமல் காய்ந்து உதிர்ந்து விடுகின்றன.

தடுப்பு முறை—

ஒரு சதவிகித போர்டோ கலவையைத் தெளிக்க வேண்டும்.

4. வாடல் நோய் (Wilt)—

* இந்நோயின் ஆரம்பத்தில் ஒரு சில கிளைகளில் இலைகள் தொங்கிக் கொண்டிருப்பதைக் காணலாம்.

* குளிர்ந்த காலநிலை தொடர்ந்து இருந்தால் விரைவில் மற்ற கிளைகளில் உள்ள இலைகளும் வாடி விடுகின்றன. பின் செடி முழுதுமே காய்ந்து விடுகிறது.

* தாக்கப்பட்ட செடிகளைப் பிடுங்கிப் பார்த்தால் வேர்ப் பாகத்தில் வெண்மையான நூலிழைகள் போன்று பூசணம் தென்படும்.

* பூசணம் தாக்கிய பகுதியில் பட்டை முழுதும் அழுகியிருக்கும்.

தடுப்பு முறை—

ஒரு சதவிகித போர்டோ கலவை அல்லது 0·1 சதவிகிதம் தண்ணீரில் கரையும் செரசான் அல்லது செசன்ட் காம்பவுண்டு (cheshent compound) ஒரு அவுன்சுக்கு 2 காலன் தண்ணீர் வீதம் கலந்து தரையை நன்கு நனைத்து இந் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ம் தேதி தமிழ் நாட்டில் மின்சார வசதி பெற்றிருந்த நகரங்கள், கிராமங்களின் மொத்த எண்ணிக்கை 16,564; மின்சாரப் பம்பு செட்டுகளின் எண்ணிக்கை 1,86,096.

மேழிச் செல்வம் சந்தாதாரர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

1964-ம் ஆண்டு மே மாதத்தோடு முடிவாகும் "மேழிச் செல்வம்" மாத இதழ் சந்தாதாரர்களின் சந்தா எண், மாதம் ரீதியாக கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

மாவட்டம்.	சந்தா எண் ஆரம்பம்.	முடிவு.
செங்கல்பட்டு	2847	2860
தென் ஆர்க்காடு	4463	4577
வட ஆர்க்காடு	8839	8957
தஞ்சாவூர்	9256	9341
திருச்சி	6915	6944
சேலம்	5346	5651
மதுரை	2423	2477
கோயம்புத்தூர்	2768	2833
இராமநாதபுரம்	1950	2002
திருநெல்வேலி	6815	7017
கன்னியாகுமரி	1295	1323
நீலகிரி	..	..
உள்ளூர் சந்தா	2309	2318

மேழிச் செல்வம் தொடர்ந்து பெற உடனடியாக சந்தா தொகையாகிய ரூ. 3 (மூன்று மட்டும்) அருகிலுள்ள விவசாய அலுவலகத்திலாவது அல்லது பணத்தை மணியார்டர் மூலமாகக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பியாவது புதுப்பித்துக் கொள்ளுங்கள். **புதுப்பிக்கும்போது தவறாமல் சந்தா எண்ணை அதில் குறிப்பிடவும்.** உங்கள் நண்பர்களையும் சந்தாதாரர்களாக்குங்கள்.

வேளாண்மைத் துறை நெறியாளர்,
தபால் பெட்டி எண் 412,
சேப்பாக்கம், சென்னை-5.

சந்தா விவரம் :—

	ரூ.	ந.பை.
தனிப்பிரதி விலை	0	25
சித்திரை மலர்	0	50
ஆண்டு சந்தா	3	00

ஆறுமாத சந்தா கிடையாது. தபால் தலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. சந்தாதாரர்கள் விலாசத்தில் மாறுதல் ஏற்பட்டால் சந்தா எண்ணைத் தெளிவாகக் குறிப்பிட்டு மேல்கண்ட விலாசத்திற்கு தெரிவிக்கவும்.

இந்திய மொழிகளில் உங்கள் தந்திகள்

எந்த
இந்திய மொழியிலும்
நீங்கள் தந்தியை
அனுப்பலாம்
ஆனுல்
தந்திச் செய்தி
தேவநாகரி எழுத்தில்
எழுதியிருக்கவேண்டும்.

ஆங்கிலத்தில் அனுப்பப்படும், வாழ்த்துத் தந்திகள், (வாழ்த்து வாக்கியங்கள் இந்தியில்), டீலக்ஸ் தந்திகள், பத்திரிக்கைச் செய்தித் தந்திகள், உயிருக்கு ஆபத்தான செய்திகள் அடங்கிய அவசரத் தந்திகள், போனே கிராம்கள், சுருக்கமான தந்தி விலாசங்களை பதிவு செய்துகொள்ளுதல், போன்ற தந்தி வசதிகள், தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்டவைகளுக்கும் கிடைக்கின்றன.

இவ்வசதி 2000 தந்தி
காரியாலயங்களில் கிடைக்கிறது.

தபால் தந்தி இலாகா

DA 63/475

விவசாய செய்திக்கதிர்

(திரு. M. காசி விஸ்வநாதன், T. ரகோத்தமராவ், விரிவினைப் பிரிவு, கோவை.)

வரப்போகும் பருவத்தில் விதைப்பிற்காக தங்கள் நிலங்களை உழ ஆரம்பிப்பார்கள். இம்மாதக் குறிப்புகளில் விதைப்பைப் பற்றி சில குறிப்புகள் தரப்படுகின்றன.

* விதைகளை மண்ணில் தகுந்த ஈரப்பதம் இருக்கும் போது விதைக்க வேண்டும்.

* ஒவ்வொரு குழியிலும் குறிப்பிட்ட அளவு விதைகளைத்தான் விதைக்க வேண்டும்.

* விதைக்கப்பட்ட விதைகள் காற்றாலும், பறவைகளாலும் சேதமுறாமலிருக்க விதைத்தபின் அவற்றை மண்ணால் மறைக்க வேண்டும்.

* அந்தந்த இடத்திற்கேற்ற பொறுக்கு விதை ரகங்களையே விதைக்க வேண்டும்.

விதைகள் நன்கு முளைத்து வெளிவருவதற்குக் காற்றோட்டமும் ஈரமும் மிக அவசியம். 'விளையும் பயிர் முளையிலே' என்பதை ஒட்டி விதைகள் ஆரம்பத்தில் நன்கு முளைத்தால்தான் அதிலிருந்து வரும் பயிரும் சிறந்து விளங்கும். பொதுவாக விதைகளை, குறிப்பாக பருவ வரம்புப் பயிர்களின் விதைகளை உற்ற காலத்திற்குள் விதைக்க வேண்டியது அவசியம். விதைகளைக் கை விதைப்பு செய்வதன் மூலம் அதிகமான அளவு விதைகள் தேவைப்படுவதோடு முளைத்துவரும் செடிகள் சில இடங்களில் நெருக்கமாகவும் சில இடங்களில் அதிக இடைவெளியுடையனவாயும் இருக்கும். ஆகவே, செடிகளைக் களைத்து சொட்டையாக உள்ள இடங்களில் நிரப்ப வேண்டியிருக்கும். ஆகவே விதைக்கு விதை ஒரே இடைவெளி அமையவும், விதைகள் ஒரே ஆழத்தில் சீராக விழுவதற்கும் விதைகளை வரிசையில் விதைக் கலப்பையைக் கொண்டு விதைப்பது மிகவும் சிறந்தது.

ராகிப்பயிருக்கு உரமிடல்

ராகிப்பயிருக்கு ஏக்கருக்கு 5 டன் தொழு உரத்துக்கு மேல் 40 ராத்தல் தழைச்சத்து, 20 ராத்தல் மணிச்சத்து, 20 ராத்தல் சாம்பல் சத்து ஆகியவை தேவைப்படும். தழைச் சத்தை அம்மோனியம் சல்பேட், கால்சியம் அம்மோனியம் நைட்ரேட், யூரியா ஆகிய மூன்று செயற்கை உரங்கள் வடிவில் இட்டு பரிசோதித்துப் பார்த்ததில், இம் மூன்று உரங்களும் ஒரே அளவு தழைச்சத்து அளவின் அடிப்படையில் மகசூலை சுமாராக ஒரே அளவு அதிகரிக்கின்றன என்று தெரிகிறது. ஆகவே விவசாயிகள் ராகிப் பயிருக்கு அம்மோனியம் சல்பேட்டை மட்டும் நாடாமல் இப்போது அதிகமாகக் கிடைக்கும் கால்சியம் அம்மோனியம் நைட்ரேட் உரத்தையும் உபயோகிக்கலாம். இவ்வுரத்தை ராகி நடும்போது நிலத்திலிடுவதுதான் சிறந்தது என்றும் பரிசோதனையின்மூலம் தெரிகிறது.

வாழை

நம் நாட்டில் சாதாரணமாக எல்லோராலும் விரும்பி உண்ணப்படும் வாழைப்பழம் இன்று வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதியாகிறது. ஆகவே, வாழையின் உற்பத்தியை அதிகரிப்பதன்மூலம் விவசாயிகள் நல்ல பலனடையலாம். வாழைச் சாகுபடி சம்பந்தமான ஆராய்ச்சிகளின் மூலம் கண்ட விளைவுகள் சில கீழே தரப்படுகின்றன.

* அகலமான இலைகளையுடைய கன்றுகளைவிட நீண்டு குறுகிய இலைகளையுடைய கன்றுகள் நடுவதற்குச் சிறந்தவை.

* புதிய தோட்டங்களில் நடுவதற்கு வளரும் குருத்துடன் கூடிய தண்டின் நடு பாகத்தை நடுவது முழுத்தண்டை நடுவதற்கொத்தது.

* தஞ்சாவூர் மாவட்டத்தில் வாழை நடுவதற்கு ஆகஸ்டு, டிசம்பர் மாதங்கள் உகந்தவை.

* நஞ்செய் நிலங்களில் வாழைக்கு 7–8 அடி இடைவெளியும் நிரந்தரமாகச் சாகுபடி செய்யும் தோட்டங்களில் 9–10 அடி இடைவெளியும் விடவேண்டும்.

* இரண்டு வாழைப் பயிர்களை அடுத்து கரும்புப் பயிரை நடுவது இலாபகரமான பயிர் சுழற்சியாக விளங்கும்.

* தாய்மரம் பூ விடும்போது ஒரு கன்றைமட்டும் வளரவிடுதல் சிறந்தது.

* அறுவடைக்குப்பின் வாழைத் தண்டை பாதியில் விட்டு விடுவதும் அல்லது அப்படியே விட்டுவிடுவதும் அதற்கடுத்து வளரும் வாழைப் பயிர் நன்கு வளர்ந்து பலனளிக்க உதவுகிறது.

உரமிடல்

வாழைக்குத் தேவையான உரங்களின் அளவுகள் ஆங்காங்கு பின்பற்றப்படும் சாகுபடி முறைகளையும், மண்ணிலுள்ள பயிர்ச்சத்து குறைபாட்டையும் பொறுத்து வேறுபடுமாயினும் பொதுவாக செடி ஒன்றுக்கு ஆண்டுக்கு (25 ராத்தல் தொழு உரத்துக்கு மேல்) 24–30 அவுன்சு தாழைச்சத்து (அம்மோனியம் சல்பேட்டு ரூபத்தில்) 16–48 அவுன்சு மணிச்சத்து (சூப்பர் பாஸ்பேட் ரூபத்தில்) 24–72 அவுன்சு பொட்டாஷ் (சல்பேட் அல்லது மியூரியேட் அப் பொட்டாஷ் ரூபத்தில்) ஆகியவை தேவைப்படும். இவற்றில் பாஸ்பேட், பொட்டாசிய உரங்களில் பாதியை நடும் சமயத்திலும் அல்லது நட்ட உடனேயும் மற்ற பாதியை இரண்டாம் வாழை பூக்கும்போதும் இடவேண்டும். அம்மோனியம் சல்பேட்டை சிறிது சிறிதாக 4–6 வாரத்திற்கொரு முறையாக மரங்களைச் சுற்றிலும் ஒவ்வொரு முறையும் சற்று அப்பால் அதிகப்படியான நாலடிக்கு அப்பால் வரை இடலாம். மலைச் சரிவுகளில் சரிவுகளின் மேல் பக்கத்தில் உரங்களை இடவேண்டும்.

பூச்சிகள்

வாழையைத் தாக்கும் பூச்சிகளில் வாழை மூக்கு வண்டு முக்கியமானது. இவ்வண்டின் புழுக்கள் வாழையின் பூமிக்கடியிலுள்ள கிழங்குப் பாகங்களைத் துளைப்பதால் இளஞ்செடிகள் வாடிவிடுகின்றன. வயது வந்த செடிகள் தாக்குதலை எதிர்க்கும் வன்மை பெற்றிருந்தாலும் அவற்றின் வீரியம் குறைந்துவிடுகிறது. தாய்ப்பூச்சி பூமி மட்டத்திற்கருகாமையில் தண்டுக்குள் முட்டையை இடுகிறது. மண்ணிற்கடியில் கிழங்குகள் இருப்பதால் இப் பூச்சியைக் கட்டுப்படுத்துவது கடினம். தாக்குதலுக்குட்பட்ட கன்றுகளை நிலத்திலிருந்து அகற்றி எரித்து அழிப்பதன்மூலம் ஓரளவுக்கு இப்பூச்சியினால் ஏற்படும் சேதத்தைக் கட்டுப் படுத்தலாம்.

வாழையைப் புகையிலைப் புழு, கருப்புக் கம்பளிப் பூச்சி போன்ற புழுக்களும் தாக்குகின்றன. டி.டி.டீ. நீரில் நனையும் தூளை (50 சதவீதம்) 0·2 சதவீதம் வீரியத்தில் 25 காலன் தண்ணீருக்கு ஒரு ராத்தல் மருந்துவீதம் கலந்து தெளிப்பதன்மூலம் இவற்றைக் கட்டுப்படுத்தலாம். வாழையைச் சில சமயங்களில் கண்ணாடி இறக்கைப்பூச்சி தாக்கி செடியின் சாற்றை உறிஞ்சுவதன்மூலம் சேதம் விளைவிக்கின்றது. இலைகளின் அடிப்பாகத்தில் கூட்டமாக காணப்படும் இப்பூச்சிகளை மேற்கூறிய முறையைக் கொண்டே கட்டுப்படுத்தலாம்.

மலைவாழைகளில் பழத்தின் மேற்புறத்திலுள்ள கருமை நிறம் 'திரிப்ஸ்' பேன் பூச்சிகளின் தாக்குதலினால் ஏற்படக்கூடும் என்றும் ஆகவே பூச்சி மருந்துகளைத் தூவுவதன் மூலம் ஓரளவுக்கு இக்கருமை நிறத்தைப் போக்கலாம் என்றும் துவக்கப் பரிசோதனைகளிலிருந்து தெரிய வருகிறது.

ஏ.எஸ்.டி. 12 ஒட்டு ஆனைக்கொம்பன்

ஒரு புதிய வெளியீடு.

- பிசானம் பட்டத்திற்கு விதைப்பதற்கேற்றது.
- ஏ. எஸ். டி. 6 ஆனைக்கொம்பனைவிட 16 முதல் 19 சதவீதம் அதிக விளைச்சல் கொடுக்கும்.
- ஏக்கருக்கு 3,800 ராத்தல் வரை விளைச்சல் தரும்.
- பயிரின் வயது 165 நாட்கள்.
- நல்ல மணியும், வெள்ளை அரிசியும் கொண்டது.
- சமைப்பதற்கேற்றது.
- ஏ. எஸ். டி. 6 நெல் மணியைவிட குட்டையானது.
- நெல்லிலிருந்து அரிசி கிடைப்பது எடையில் 68 சத வீதமும், அளவில் 49 சத வீதமுமாகும்.
- பட்டாம்பி. 15 நெம்பர், ஜி. இ. பி. 24 இயற்கை சேர்க்கையிலிருந்து பொறுக்கப்பட்டது.

திருநெல்வேலி இதர பகுதிகளுக்கு பிசானப் பட்டத்தில் பயிராகும் ஏ. எஸ். டி. 6 ஆனைக்கொம்பன் நெல்லுக்குப் பதில் விதைப்பதற்கேற்ற ஏ. எஸ். டி. 12 ஒட்டு ஆனைக் கொம்பன் ரகத்தைப் பயிரிடுங்கள்.

திருவூர் நெல் ஆராய்ச்சிப் பண்ணையின் "விவசாயிகள் தினவிழா"

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருவூர் நெல் ஆராய்ச்சிப் பண்ணையின் 11-ஆவது ஆண்டு "விவசாயிகள் தினவிழா" 1964-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் தேதி அன்று பண்ணையில் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு திரு. குணச்சந்திரன், B.Sc. (Ag.), பூண்டி நிலக்கிழார் தலைமை வகித்தார். கைவண்டூர் திரு. ராஜு முதலியார் அவர்கள் கண்காட்சியை திறந்து வைத்தார், சென்னை துணை விவசாயத் துறை நெறியாளர் திரு. அழகிய மணவாளன் அவர்கள் விழாவினை நடத்தி வைத்தார்கள்.

பண்ணை நிர்வாகி ஆண்டு அறிக்கை வாசித்தபின் நடைபெற்ற பயிர்த் தொழில் பற்றிய விவாதத்தில் வந்திருந்த விவசாய பெருமக்களும், விவசாயத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

விழாவை ஒட்டி நடத்தப்பட்ட காய்கறிகள், கால்நடை, கோழி பரிசுப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு கும்மிடிப்பூண்டி பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர் திரு. ஒபுல் ரெட்டி, B..A, பரிசு வழங்கினார்.

வந்தனோபசாரத்திற்குப் பின் தேசிய கீதத்துடன் விழா முடிவடைந்தது.

அதிக மகசூலால் அதிக வருவாய் பெறும்
பெரிய தோட்டக்காரர்கள்
சிறந்த ஜாதி காய்கறி விதைகள் பெறுமிடம்:

ராஜா பண்ணைத் தோட்டம்

இக்காலத்துக்குத் தகுதியான
நோய் அணுகா, அதிக மகசூல் தரும் கவர்ச்சிகர ஜாதி
வெண்டை

மிகப் பெரிய நீண்ட, சதை பருத்த ருசி
மிகுந்த அதிசய ஜாதி
கொத்தவரை

ருசி மிகுந்த, கவர்ச்சிகரமான 14 வித புகழ் பெற்ற
கத்திரி

புகழ் பெற்ற பெரிய ரோஜா உருண்டை பல்லாரி
வெங்காயம்

இதர பலவித உயர்ந்த தோட்டை மிளகாய், முள்ளங்கி ஜாதிகள், பரங்கி, பூசணி, வெள்ளரி முதலான காய்கறி விதைகள், பழச் செடிகள், தென்னங் கன்றுகள், களை நாசினிகள்

கிடைக்குமிடம் :—

ராஜா பண்ணைத் தோட்டம்

தபால் பெட்டி எண் 1423, சென்னை-17.
தந்தி: RAJSEED — போன: 42262

கருவேப்பிலை மரத்தைத் துளைக்கும் புழுவும் அதன் தடுப்பும்

வி. வசந்தராஜ் டேவிட், எஸ். விஜயராகவன், பி. எஸ். நாராயணசாமி

சமீபத்தில் கோயமுத்தூர் மாவட்டத்திலுள்ள உடையாம்பாளையம் என்ற சிற்றூரில் கருவேப்பிலை மரங்கள் ஒரு வகை துளைக்கும் புழுவினால் (Indarbela tetronis Moore) தாக்கப்பட்டு பெருமளவில் சேதமடைந்தன. இப்புழுவை நவீன முறையில் பூச்சி மருந்துகளைத் தெளித்து ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியும்.



1 புழுவினால் தாக்கப்படாத பாகம்
2 புழுவினால் தாக்கப்பட்ட பாகம்

அந்துப் பூச்சி முட்டைகளைக் கருவேப்பிலை மரப்பட்டையின் இடையிலோ அல்லது காயமடைந்த இடங்களிலோ இடுகின்றது. முட்டையிலிருந்து வெளிவரும் புழு மரப்பட்டையைச் சுரண்டித் தின்று மரத்தண்டையும் சுமார் ஆறு அங்குல ஆழத்திற்குத் துளைத்து சேதம் ஏற்படுத்துகிறது. (படம் 1). இந்தப் பூச்சி கருவேப்பிலை மரம் மட்டுமல்லாது சவுக்கு, மாமரம், கொய்யா, முருங்கை, ரோஜா, ஆரஞ்சு இலந்தை, நெல்லி, லிச்சி, நாவாய் மரம், வாதநாராயணன், அசோகா, சீமைக்கொன்னை, வாகை முதலியவற்றையும் தாக்குகிறது.

சேதத்தின் தன்மை.—இரவு நேரத்தில் புழு கூட்டினுள்ளிருந்துகொண்டு பட்டையைச் சுரண்டித் தின்னுகிறது. பகல் நேரங்களில் அது தண்டிலுள்ள துளையினுள் தங்கி விடுகின்றது. இவ்விதம் பட்டை பாகத்தைச் சுரண்டிச் சாப்பிட்டு விடுவதினால் தாக்கப்பட்ட இடத்திலிருந்து மரத்தின் நுனிப்பாகம் வரை நாளடைவில் காய்ந்து விடுகிறது. நடுமரத்தில் சுமார் 15 புழுக்கள் வரை காணப்படுகின்றன. இவை இலைகள் பிரியுமிடத்திலும், கிளைகளிலும் சேதம் விளைவிப்பதால் இலைகள் துளிர்க்காமல் கிளைகள் காய்ந்து கருவேப்பிலை மரங்கள் பயனற்று விடுகின்றன.

தடுப்பு.—இப்புழு கூட்டிற்குள்ளும் கிளையிலுள்ள துவாரத்திற்குள்ளும் இருப்பதினால் இதைத் தடுப்பது மிகவும் கடினம். இதன் கூட்டை மரக்கிளையினின்றும் முதலில் நீக்கி விடவேண்டும். பிறகு பி. எச். சி. 0·2 சதம் (ஒரு பவுண்டு பி. எச். சி. 50 சத மருந்துக்கு $3\frac{1}{4}$ காலன் தண்ணீர்) அல்லது எண்டிரின் 0·04 சத (இரண்டு அவுன்ஸ் மருந்துக்கு $6\frac{1}{4}$ காலன் தண்ணீர்) மருந்தை ஸ்பிரேயர் மூலம் புழுவுள்ள துவாரத்தினுள் அடிக்கவேண்டும். மரக்கிளையிலும் தெளிக்க வேண்டும். மருந்து தெளிப்பதற்கு முன்னால் இலைகளைப் பரித்து விடவேண்டும். மருந்து தெளித்த சிறிது நேரத்தில் துவாரத்தினின்றும் வெளிப்பட்டுக் கீழே விழுந்து இறந்து விடுகிறது. ஒரு மரத்திற்கு மேற்கூறிய மருந்து தெளிக்க பி. எச். சி-க்கு 30 ந. பைசாவும் எண்டிரினுக்கு 19 ந. பைசாவுமே ஆகும். இந்த முறையைக் கடைப்பிடிப்பதன் மூலம் மேற்கூறிய மற்ற மரங்களிலும் இப்புழுக்களைக் கட்டுபடுத்தலாம்.



கூட்டுப் புழுவும், புழுவும்

நாட்டின் பாதுகாப்புக்கும்

அபிவிருத்திக்கும் நெருங்கிய

தொடர்பு உண்டு

பாதுகாப்பு முயற்சிககு பககபலமாக. ஒவவொரு கிராமத்திலும் ஒரு விவசாய உற்பததித் திட்டத்தை ஏற்படுதத முயற்சிகள் எடுககபபடடுளளன.

கொள்கையை ஒருங்கிணைககவும், உற்பத்தியைப பெருககவும், ஒரு உயர் அதிகார மததிய விவசாய உற்பததி போர்டு அமைககபபடடுள்ளது. தற்போதுளள நெருககடியில், விளைச்சலை அதிகரிககவும, இறககுமதியைக் குறைதது. வெளிநாட்டு செலாவணியை பாதுகாத்து பாதுகாபபுத் தேவைககு பயனபட, முயற்சிகள் செயயபபடடு வருகிறது.

எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும்—விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் இந்த இயக்கத்திற்கு ஆதரவு அளியுங்கள்.

திட்டத்திற்கு உதவுங்கள்

இந்தியாவின் பாதுகாப்பைப் பலப்படுத்துங்கள்.

புகையிலையின் கருந்தண்டு நோய்

[எச். டி. லெவின், எம்.எஸ்ஸி. (வேளாண்மை), கா. சிவப்பிரகாசம், பி.எஸ்ஸி. (வேளாண்மை), சி. எஸ். கிருட்டிணமூர்த்தி, பி.எஸ்ஸி. (வேளாண்மை), பூசண இயற்பிரிவு, வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சிக் கழகம், கோவை-3,]

புகையிலையின் விளைவையும் தரத்தையும் பாதிக்கும் நோய்களில் ஒன்று கருந்தண்டு நோய் (black shank). இது ஒரு வகை பூசணத்தால் (Phytophthora parasitica Vai-nicotiana) ஏற்படுகிறது.

அறிகுறிகள் :—வயதுக்கும் கால நிலைக்கும் தக்கவாறு நோயின் அறிகுறிகள் மாறுபடும் நோய் தண்டின் அடிப் பாகத்தையும் வேர்பாகத்தையுமே பாதிக்கிறது. நாற்று நட்ட பத்து அல்லது பதினைந்து நாட்களுக்குள் நோய் தோன்றினால் தண்டு பாகம் தரைமட்டத்தில் தாக்கப்பட்டு செடி நிலத்தில் சாய்ந்து விடுகிறது. இதனால் செடி முழுவதும் பாதிக்கப்பட்டு வீணாகிறது. ஒரு அடி வளர்ந்த செடிகள் திடீரென்று வாடுவதும் இந்த நோயின் அறிகுறியாகும். வாடிய செடியின் வேரின் அடிப்பாகம் அழுகிவிடுகிறது. தண்டின் அடிப்பாகமும் கருத்து நோய் மேல் பாகத்திற்கும் பரவுகிறது. தாக்கப் பட்ட தண்டுப் பாகத்தைப் பிளந்து பார்த்தால் உட் பாகமும் கருத்திருக்கும் அத்துடன் உள் பாகத்தில வெடிப்பு ஏற்பட்டு தட்டுகள் ஒன்றின்மேல் ஒன்று அடுக்கியிருப்பது போலக் காட்சியளிக்கும். இலைகள் பழுத்து சுருங்கி பின் பழுப்பாகிவிடுகின்றன. முதலில் கீழ் இலைகளும் பின் மேல் இலைகளும் வாட ஆரம்பிக் கின்றன. மழைக் காலங்களில் கீழ் இலைகளில் பெரிய பழுப்பு நிறப் புள்ளிகள் உண்டாகின்றன. குளிர்ந்தகால நிலை தொடர்ந்திருந்தால் நோய் மிக விரைவில் பாவி செடி அழுகி விடுகிறது நோய்ப்பட்ட இலைகள் பக்குவப் படுத்தலின்போது முறிந்து நொருங்கி விடுகின்றன.

பரவும் முறை—

(1) நோயினால் தாக்கப்பட்ட செடியின் பல பாக களும் மண்ணில் விழுந்து கலந்திருக்கும். இவை காற்று பாசன நீர், உழவடைக் கருவிகள், கால் நடை முதலி யவை மூலம் நோயில்லாத மற்ற நிலங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

(2) உரக்குழிகளில் போடப்பட்ட நோய்கண்ட புகை யிலைச் செடிகளை நன்றாக மக்குவதற்கு முன்பு உர மாக உபயோகிப்பது நல்லதல்ல. ஏனெனில் அவைகளில் அழியாமல் இருக்கும் பூசணவித்துக்கள் மூலம் நோய் மேலும் பரவுகிறது. (நோய்கண்ட செடிகளை எரித்து விடு வதே சிறந்தது).

இந்நோயை உண்டாக்கும் பூசண வித்துக்கள் சுமார் ஐந்து ஆண்டுகள் வரையிலும் கூட அழியாமல் நிலத்தில் தங்கி பிறகு அதாகப் பயிரிடும் புகையிலைப் பயிரிலும் நோயினை உண்டாக்கும்.

தடுப்பு முறை.—நோய் கண்ட செடிகளையும் கீழே உதிர்ந்திருக்கும் இலைபோன்ற பாகங்களையும் அப்போதைக் கப்போது அப்புறப்படுத்தி எரித்து விடவேண்டும் 'சினப்' (Zineb) என்னும் மருந்தை ஒரு இராத்தலுக்கு 40 காலன் தண்ணீர் வீதம் கலந்து செடிகள் இருந்த குழி களில் ஊற்ற வேண்டும்.

* மிகுதியான அளவில் நீர் பாய்ச்சுவதைத் தவிர்க்க வேண்டும்.

* நாற்றுப்பாவு முன் நாற்றங்கால் பாத்திகளில் உலர்ந்த சோளத் தட்டை பருத்திமார், வைக்கோல் போன்றவற்றைப் பரப்பி, தீ வைத்துக் கொளுத்துதல் (Sterilization) சிறந்தது. இவ்வாறு செய்வதால் நோய்க் குக் காரணமான பூசணவித்துக்கள் மண்ணில் கலந்திருந் தால் ஓரளவு அழிக்கப்படுகின்றன.

* நடுவதற்கு முன்பு நாற்றுக்களின் தூர்ப்பாகங்களை ஒரு விகித போர்டோ கலவையில் நனைத்தெடுத்த பின் நட வேண்டும்.

* நட்ட பயிரில் நோய் பரவாமல் தடுக்க ஒரு சதவிகித போர்டோ கலவையால் செடியின் தூரை நனைத்தல் (drenching) வேண்டும், நோயின் தன்மைக்குத் தக்க வாறு மூன்று அல்லது நான்கு முறை இவ்வாறு செய் தல் சிறந்தது.

* நோய் தாக்காத புகையிலை ரகங்களைப் பயிரிடுவது மிகவும் சிறந்தது.

நிலக்கடலை விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் ஒரு எச்சரிக்கை!

நிலக்கடலையைக் கவனமாக சேமித்து வையுங்கள்

அஜாக்கிரதையாகச் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் நிலக்கடலை, நிலக்கடலைப் பிண்ணாக்கு, நிலக்கடலை உணவுப் பொருட்களில் "அஃப்லோடாக்ஸின்" (Aflatoxin) என்ற விஷம் உண்டாக ஏதுவாகும். இவ்விஷம் பாதிக்கப்பட்ட பொருள்களை உண்ணும் மனித, கால்நடை இனங்களின் உயிருக்கு பாதகம் விளைவிக்கும் தன்மை வாய்ந்தது.

இவ்விஷம் உண்டாவதற்கு "ஆஸ்பர்ஜில்லஸ் பிளேவஸ்" (Aspergillus Flavus) என்ற பூசணமே காரணம் என்று ஆராய்ச்சியின்மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. நம்நாடு போன்ற உஷ்ணப் பிரதேசங்களில் உடைத்த கடலைகளில் அதன் ஈரம் 9 சதவீதத்திற்கு மேலும், நிலக்கடலைப் பிண்ணாக்கு, உணவுப்பொருட்கள் போன்றவைகளில் ஈரம் 16 சதவீதத்திற்கு மேலும் இருக்கும் நிலையில் இப்பூசணம் உருவாகி, விரைவில் வளர்ந்து பரவும் என்றும் தெரிய வருகிறது.

இப்பூசணம் நிலக்கடலையில் உண்டாவதைத் தடுக்க

1. அறுவடைக்கு வந்த முற்றின நிலக்கடலைப் பயிரை நிலத்தில் நெடுநாள் விட்டு வைத்தல் கூடாது.

2. கடலை அறுவடையானதும் உடனே நன்கு காய வைத்தல் வேண்டும்.

3. வெடிப்பு விட்ட கடலைகளை மற்றவைகளிடமிருந்து பொறுக்கி எடுத்து விட வேண்டும். இவற்றிலிருந்து உடைத்த பருப்பை தனியாகவே காய வைக்கவேண்டும்.

4. சேமித்து வைக்குமுன் நிலக்கடலையின் ஈரம் 9 சத வீதத்திற்கும் குறைந்துவிட்டதா என்று கண்டிப்பாக கவனித்தல் வேண்டும்.

இந்திய மத்திய எண்ணெய் வித்துக்குழுவின் ஆதரவில் இதுபற்றிய விவரமான ஆராய்ச்சி ஹைதராபாத்தில் உள்ள கேந்திர ஆராய்ச்சி பரிசோதனைச்சாலையில் நடை பெற்று வருகிறது.

விதைக்குமுன் வித்துக்கு மருந்திடுங்கள்

சென்னை மாநில வர்த்தகப் பயிர்களின் 1964-ம் ஆண்டு பிப்ரவரி மாத விற்பனை நிலைமையைப் பற்றிய விவரம்

1. பருவநிலை :

சென்னை மாநிலத்தில் சில முக்கிய இடங்களின் மழையின் அளவு சென்ற மாதத்திற்கும் இம் மாதத்திற்கும் ஒப்பிட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

[மழை அளவு செ. மீட்டரில்.]

வரிசை எண்.	இடங்களின் பெயர்.	பிப்ரவரி—1964.	சனவரி—1964.
(1)	(2)	(3)	(4)
1	கோவை ..	இல்லை.	இல்லை
2	கடலூர் ..	ஷை	ஷை
3	கள்ளக்குறிச்சி ..	ஷை	ஷை
4	பாளையங்கோட்டை ..	1 7	2·1
5	தூத்துக்குடி ..	1·4	2·1
6	திருச்சி ..	இல்லை.	இல்லை.
7	திருப்பத்தூர் ..	ஷை	ஷை
8	வேலூர் ..	ஷை	ஷை

பொதுவாக சென்னை மாநிலத்தில் மழை இல்லை. கோயம்புத்தூரில் கம்போடியா பருத்தி அறுவடை நல்ல நிலையிலிருந்தது. கருங்கண்ணிக்கு மழை தேவைப்பட்டது. தென்னாற்காட்டில் நெல் அறுவடையும், வட ஆற்காட்டில் கோடைகால பயிர்களும் நன்றாக இருந்தன.

2. வர்த்தக நிலைமை—(Market situation) :

சென்னை மாநிலத்திலுள்ள ஒழுங்கு விற்பனைக் கூட்டத்திற்கு வந்த பருத்தி லின்ட் ராசிகளின் விவரம் :

[எடையளவு குயிண்டாலில்]

வரிசை எண்.	விற்பனைக் கூடத்தின் பெயர்கள்.	ஆரம்ப இருப்பு.	விற்பனைக்கு வந்தவை.	விற்பனை ஆனவை.	இறுதி இருப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	(அ) கம்போடியா கப்பாஸ்				
1	பொள்ளாச்சி ..	1,800	9,000	8,500	2,300
2	திருப்பூர் ..	18,704	27,917	29,286	17,335
3	உடுமலைப்பேட்டை ..		..	..	..
4	சூளூர் ..	1,005	9,1'5	8,000	2,160
5	அவனாசி ..	1,850	1,000	1,150	1,700
6	சென்னிமலை ..	350	800	780	370
7	பெருந்துறை ..	200	3,800	3,600	400
8	கோவை ..	5,700	3,000	3,700	5,000
	(ஆ) கருங்கண்ணி கப்பாஸ்				
1	உடுமலைப்பேட்டை ..	294	80	200	174
2	திருப்பூர் ..	2, 28	..	2,.23	இல்லை.
3	சூலூர் ..	..	..	..	..
4	விருதுநகர் ..	250	7,500	7,750	இல்லை.
5	சாத்தூர் ..	..	1,000	1,000	ஷை
6	இராசபாளையம் ..	..	குறிப்பிடவில்லை.	குறிப்பிடவில்லை.	குறிப்பிடவில்லை.
7	கோவில்பட்டி ..	1,390	25	..	1,415
	(இ) உகந்தா கப்பாஸ்				
1	விருதுநகர் ..	..	..	..	..
2	சாத்தூர் ..	..	..	..	..
3	இராசபாளையம் ..	..	..	..	..
4	சங்கரன்கோவில் .	450	..	150	300

3. (அ) கம்போடியா லின்ட்

வரிசை எண்.	விற்பனைக் கூடத்தின் பெயர்கள்.	ஆரம்ப இருப்பு.	விற்பனைக்கு வந்தவை.	விற்பனை ஆனவை.	இறுதி இருப்பு.
1	பொள்ளாச்சி ..	2,660	2,500	3,000	2,160
2	திருப்பூர் ..	29,428	10,343	13,611	26,160
3	உடுமலைப்பேட்டை ..	745	1,3 0	1,000	1,045
4	சூளூர் ..	135	1,050	950	235
5	கோவை ..	2,500	2,500	2,500	2,500

வரிசை எண்.	விற்பனைக் கூடத்தின் பெயர்கள்.	ஆரம்ப இருப்பு.	விற்பனைக்கு வந்தவை.	விற்பனை ஆனவை.	இறுதி இருப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
	(அ) கம்போடியா லின்ட்—தொடர்ச்சி.				
6	புளியம்பட்டி ..	10	25	20	15
7	ஈரோடு ..	470	800	770	500
8	கோபி ..	50	50	30	70
9	சென்னிமலை ..	390	900	840	450
10	அவனுசி ..	1,850	1,000	1,250	1,600
11	பவானி ..	5	..	..	5
12	பெருந்துரை ..	200	100	100	200
	(ஆ) கருங்கண்ணி லின்ட்				
1	விருதுநகர் ..	360	2,100	2,400	60
2	சாத்தூர் ..	..	280	280	..
3	இராசபாளையம் ..	..	..	..	..
4	கோவில்பட்டி ..	375	20	125	270
5	உடுமலைப்பேட்டை ..	..	..	..	..
6	திருப்பூர் ..	41	..	41	..
	(இ) உகந்தா லின்ட்				
1	சங்கரன்கோவில் ..	13	..	..	13
2	விருதுநகர் ..	..	..	..	..
3	சாத்தூர் ..	650	..	..	650
4	இராசபாளையம் ..	1,400	..	..	1,400

வர்த்தக போக்கு—(Market trend) :

உள்ளூர் பருத்தியுடன் சேல மாவட்டத்திலிருந்தும், பருத்தி கோவை மாவட்ட வர்த்தகமிடத்திற்கு வந்தது. உயர்ந்த ரக பருத்தியினுல் அங்கு நல்ல வர்த்தக வாய்ப்பு ஏற்பட்டது கருங்கண்ணி பருத்தியின் பருவகாலம் பாதிக்கப்பட்டதால் அதிக வருகை இராமநாதபுரத்தில் இல்லை.

4. சென்னை மாநிலத்தில் சில முக்கிய விற்பனைச் சந்தைகளின் இம்மாத பருத்தி விலைப்பட்டியல் பின்வருமாறு :—

[விலைகள் ரூபாயில் ஒரு—குயிண்டாலுக்கு]

வரிசை எண்.	விற்பனைக் கூடத்தின பெயர்.	கருங்கண்ணி.		கம்போடியா.		உகந்தா.	
		கப்பாஸ்.	லின்ட்.	கப்பாஸ்.	லின்ட்.	கப்பாஸ்.	லின்ட்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1	கோவை	.. ..	..	130 முதல் 170	250 முதல் 400	..	..
2	திருப்பூர்	.. ..	..	150 முதல் 165	360	..	..
3	சூலூர்	.. ..	..	170	380	..	..
4	அவனுசி	.. ..	..	125 முதல் 155	230 முதல் 350	..	..
5	ஈரோடு	.. ..	..	125 முதல் 150	300 முதல் 430	..	..
6	பெருந்துரை	.. ..	..	85 முதல் 136	300 முதல் 360	..	..
7	பொள்ளாச்சி	.. ..	..	140 முதல் 156	255 முதல் 380	..	..
8	கோபியும், பவானியும் ..	..	..	135 முதல் 145	395	..	..
9	இராமநாதபுரம் : [கருங்கண்ணி, விருதுநகர், சாத்தூர், இராசபாளையத்திற்கும், உகந்தா சாத்தூர் இராசபாளையத்திற்கும்.]						
	(1) சிறந்தவை ..	120 முதல் 130	346 முதல் 367	..	..	வரவு செலவு இல்லை	
	(2) சாதாரணமானவை ..	100 முதல் 115	300 முதல் 340	..	..	ஷை	
	(3) மட்டமானவை ..	கிடைக்கவில்லை		..	..	ஷை	

விலைபோக்கு :

கோயம்புத்தூர் மாவட்ட வர்த்தகக் கூடங்களில் விலைகள் சென்ற மாதத்தைப் போலவே இருந்தன. கருங்கண்ணி பாதிக்கப்பட்டதால், கருங்கண்ணி கப்பாசுக்கு மிக நல்ல போட்டி இராமநாதபுர மாவட்டத்தில் ஏற்பட்டது. ஆகவே உகந்தரக பருத்தி விற்பதில் வியாபாரிகள் அக்கறைகொள்ளவில்லை.

5. **பருத்தி விதைகள் :**

சென்னை மாநிலத்தின் சில முக்கிய விற்பனைக்கூடங்களில் பருத்தி விதையின் விலைப்பட்டியல் :

விருதுநகர் விற்பனைக்கூடம்

[விலைகள் ரூபாயில்—ஒரு குயிண்டாலுக்கு]

வரிசை எண். (1)	வகை. (2)	கருங்கண்ணி விதை. (3)	உகந்தா விதை. (4)
1	சிறந்தவை	.. 25 முதல் 34	வரவு செலவு இல்லை.
2	சாதாரணமானவை	.. 32	ஷை
3	மட்டமானவை	.. கிடைக்கவில்லை.	ஷை

விலை போக்கு—(Price trend) :

விருதுநகரில் பருத்தி விதைகளின் விலைகள் சென்ற மாதத்தைவிட சற்று அதிகமாக இருந்தது.

6. **வேர்க்கடலை :**

[விற்கவந்தவையும் விற்கப்பட்டவையும்]

வரிசை எண். (1)	மாவட்டத்தின் பெயர். (2)	ஆரம்ப இருப்பு. (3)	விற்பனைக்கு வந்தவை. (4)	விற்பனை ஆனவை. (5)	இறுதி இருப்பு. (6)
(அ) முழுக்கடலை :					
1	வட ஆற்காடு	.. 1,300	37,500	38,100	700
2	திருச்சி	.. 4,270	2,600	4,500	2,370
3	கோவை	.. 7,435	8,500	9,050	6,885
4	இராமநாதபுரம்	.. ..	..	..	..
(ஆ) பருப்பு :					
1	தென்னாற்காடு	.. 60,290	29,517	40,211	49,596
2	திருச்சி	.. 5,553	7,527	9,088	3,992
3	வட ஆற்காடு	.. 1,960	19,500	20,260	1,200
4	கோவை	.. 5,600	7.300	8,880	4,020
5	இராமநாதபுரம்	.. 1,800	8,000	6,000	3,800

வர்த்தக போக்கு—(Market trend) :

திருச்சி, தென்னாற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களிலிருந்து வேர்க்கடலை கோவைக்கு வந்தது. மணிலா பருவநிலை ஏறக்குறைய முடிவுற்றதால் விருதுநகருக்கு மற்ற விற்பனைக்கூடங்களிலிருந்து மணிலா வந்தது. அதிக ஆரம்ப இருப்பு இருந்ததால் தென்னாற்காடு விற்பனைக்கூடங்களுக்கு வருகை குறைந்துள்ளது.

விலை விவரம் :

சென்னை மாநிலத்தில் சில விற்பனைக்கூடங்களில் வேர்க்கடலை, பருப்பு, எண்ணெய், பிண்ணாக்கு முதலியவைகளின் பிப்ரவரி மாத விலைப்பட்டியல் :

[விலைகள் ரூபாயில்—ஒரு குயிண்டாலுக்கு]

வரிசை எண். (1)	விவரங்கள். (2)	தென்னாற்காடு. (3)	வட ஆற்காடு. (4)	கோவை. (5)	இராமநாதபுரம். (6)	திருச்சி. (7)
1	முழுக்கடலை .. (Pods).	..	48 முதல் 72	50 முதல் 74	..	50 முதல் 70
2	பருப்பு .. (Kernels).	82 முதல் 94	83 முதல் 99	65 முதல் 100	95 முதல் 100	80 முதல் 110
3	வேர்க் கடலை எண்ணெய்.	185 முதல் 194	173 முதல் 187	..	187 முதல் 189	180 முதல் 182
4	வேர்க் கடலை பிண்ணாக்கு.	38 முதல் 41	..	..	39 முதல் 41	40 முதல் 43

விலை விவரம் :

பொதுவாக கோயம்புத்தூரில் விலைகள் சென்ற மாதத்தைப்போலவே இருந்தது. வேர்க்கடலை எண்ணெய் வருகையும், விலையும் அதிகரித்ததால் திருச்சி மாவட்டத்திலுள்ள கரூர் விற்பனைக்கூடத்தில் வேர்க்கடலை விலை குறைந்தது. ஆனால் வேர்க்கடலை பருப்புக்கு நல்ல வர்த்தகமிருந்தது. விருதுநகருக்கு மற்ற விற்பனைக் கூடங்களிலிருந்து மட்டுமே வருகை கிடைத்ததால் வேர்க்கடலை பருப்பு விலை அதிகரித்தது.

7. எள் :

[விற்பனைக்கு வந்தவையும் விற்பனையானவையும்]

சென்னை மாநிலத்தில் 1964-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திய எள் கொள்முதல் விற்பனை நிலவரம் பின்வருமாறு :—

வரிசை எண்.	விற்பனைக்கூடத்தின் பெயர்.	ஆரம்ப இருப்பு.	விற்பனைக்கு வந்தவை.	விற்பனை ஆனவை.	இறுதி இருப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	தென்னாற்காடு ..	1,148	1,254	1,437	965
2	வட ஆற்காடு ..	1,812	குறிப்பிடவில்லை.	குறிப்பிடவில்லை.	குறிப்பிடவில்லை.

விலை போக்கு :

தென்னாற்காட்டில் ஒரு குயிண்டால் எள்ளின் விலை ரூ. 107 முதல் 125 ஆக சென்ற மாதத்தைவிட அதிகரித்தது.

8. புகையிலை :

கோவை மாவட்டம்

கோவை மாவட்டத்தில் சில முக்கிய இடங்களில் புகையிலையின் இருப்பு விவரம் :

[எடையளவு குயிண்டாலில்]

வரிசை எண்.	இடத்தின் பெயர்.	ஆரம்ப இருப்பு.	விற்பனைக்கு வந்தவை.	விற்பனை ஆனவை.	இறுதி இருப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1.	பொள்ளாச்சி ..	400	200	160	440
2.	கோபனூர்புதூர் ..	5,900	50	1,400	4,550
3.	உடுமலைப்பேட்டை ..	375	25	150	250
4.	கோபி ..	600	50	100	550
5.	புஞ்சைபுளியம்பட்டி ..	1,200	..	300	900
6.	பவானி ..	700	75	150	625
7.	கொடுமுடி	350	600	580	370
8.	சித்தோடு ..	315	825	700	440
9.	காரமடை ..	900	300	400	800
10.	பல்லடம் ..	11 308	8,400	4,550	15,158
11.	கோவை ..	1,300	300	400	1,200
12.	தாராபுரம் ..	2,000	..	500	1,500
13.	பெருந்துறை ..	5	2	3	4
14.	ஈரோடு ..	620	1,250	930	940

விலைகள் :

கோவை மாவட்டத்தில் பலதரப்பட்ட புகையிலையின் விலை விவரங்களாவன :

[விலைகள் ரூபாயில் ஒரு குயிண்டாலுக்கு]

வரிசை எண்.	விற்பனைக்கூடத்தின் பெயர்.	முதல் தரம்.	இரண்டாம் தரம்.	மூன்றாம் தரம்.
(1)	(2)	(3)	(4)	(5)
(அ)	**சூயிங் மீனம்பாளையம் :**			
1.	கோவை ..	200 முதல் 300	150 முதல் 195	100 முதல் 145
2.	கோபி ..	275 முதல் 285	250	125
(ஆ)	**ஜாப்னு :**			
	பல்லடம் ..	400 முதல் 455	300 முதல் 350	150 முதல் 225
(இ)	**சூயிங் புகையிலை :**			
1.	பொள்ளாச்சி ..	187 முதல் 198	154 முதல் 176	110 முதல் 132
2.	ஈரோடு ..	185 முதல் 204	148 முதல் 185	80 முதல் 130
3.	கோவை ..	200 முதல் 300	150 முதல் 195	100 முதல் 145
(ஈ)	**செரூட் :**			
1.	ஈரோடு ..	180 முதல் 200	125 முதல் 175	82 முதல் 125
2.	கோபி ..	265	200	130
(உ)	**சூயிங் பிட்ஃயூர்ட் :**			
	பல்லடம் ..	180 முதல் 190	100 முதல் 160	65 முதல் 175

விலை போக்கு :

எவ்வித மாற்றமும் இல்லாமல் சென்ற மாதத்தைப்போலவே விலைகள் இருந்தன.


உங்கள் நெற்பயிருக்கு
போட்டாஷ்
K_2O
(நைட்ரஜன்
பாஸ்பரிக்
அமிலத்துடன்)
உபயோகியுங்கள்
பொட்டாஷ் உங்கள் நெற் பயிரின்
ஊத்தையும், தரத்தையும் உயர்த்துகிறது
பொட்டாஷ் சிகப்பாகாமல் தடுக்கும்.
பொட்டாஷ் நோய் நொடிகளை எதிர்த்து
நிற்க வலுவூட்டுகிறது.
பொட்டாஷ் பதரைக் குறைத்து,
பயிர் விளைச்சலைப் பெரிதும்
அதிகரிக்கிறது.
சகஜமான
எருவுடன் ஏக்கராவுக்கு
25 கிலோ வரை
பொட்டாஷ் ம்யூரியேட்
உபயோகியுங்கள்.
பொட்டாஷ்
மலிவானது - 25 கிலோ
பொட்டாஷ் ம்யூரியேட்
விலை 8 ரூபாய்க்கும்
குறைவானது.
பொட்டாஷ்
உபயோகியுங்கள்.
அதிக வருமானம்
பெறுங்கள்.
உங்கள் உர வியாபாரியிடம்
கேட்கவும். அல்லது
இந்த முகவரிக்கு எழுதவும்:
இந்தியன் பொட்டாஷ் சப்ளை ஏஜென்ஸி லிமிடெட்
8/9, தம்பு செட்டித் தெரு. த. பெ. நெ. 14, சென்னை-1
IPG 2 TMa

வெற்றிப் பாதை

விவசாய விளம்பர நாடகம்

[கே. எஸ். ஆலம்கீர், பி.எஸ்.ஸி., (எஜி.), வேளாண் கல்லூரி, கோவை.]

காட்சி 7

[வேலாயுதம் பிள்ளை வீடு. லட்சுமி, சோமு ராஜூ]

சோமு : (உள்ளே நுழைந்து) அண்ணி......அண்ணி

லட்சுமி : (வேகமாக உள்ளே வந்து) வாங்க தம்பி வாங்க எப்போ வந்தீங்க உட்காருங்க. ராஜூ....ராஜூ சித்தப்பா வந்திருக்கார் பாரு.

ராஜூ : (ஓடி வந்து) சித்தப்பா....எப்போ வந்தீங்க சௌக்கியமா பரீட்சை எல்லாம் நல்லா எழுதினீங்களா எங்க பள்ளிக்கூடத்திலே நான்தான் சித்தப்பா பஸ்ட்.

சோமு : வெரி குட்....ராஜூ அப்பா எங்கே... அண்ணி அண்ணா எங்கே போயிருக்கார்....

லட்சுமி : இப்பதான் தம்பி வெளியே போனாரு.... வாங்க குளிச்சுட்டு சாப்பிடலாம். (லட்சுமி உள்ளே போகிறாள். ராஜுவும் கூடப் போகிறான்).

சோமு : டேய் நீ எங்கேடா போறே.

ராஜூ : அம்மாவுக்கு உதவி செய்யப் போறேன்.

சோமு : போக்கிரிப்பயலே (ராமு உள்ளே நுழைகிறான்)

ராமு : சோமு....

சோமு : அண்ணா....

ராமு : எப்படா வந்தே. ரொம்ப மெலிஞ்சுட்டயே. ஓட்டல் சாப்பாடு ஒத்துக்கிறலையா....பணம் வந்து சேர்ந்துச்சா......

சோமு : பணம் வந்துச்சுண்ணா....ஆமா எப்படி அவ்வளவு சீக்கிரம் பணம் அனுப்பினீங்க.

ராமு : அதெல்லாம் அப்புறம் சொல்றேன். வா சாப்பிடலாம்.

சோமு : அப்பா எங்கே ? அண்ணா.

ராமு : எங்கேயோ வேதாசலம் பிள்ளை வீட்டுக்கு போனதாக காளிமுத்து சொன்னான். என்ன விஷயமுன்னு தெரியலே. இப்போ வந்திடுவாரு.

(வேலாயுதம் உள்ளே நுழைதல்)

சோமு : அப்பா........

வேலா : சோமு......எப்படா வந்தே ?

சோமு : இப்பதாம்பா வந்தேன்.

ராமு : எங்கேப்பா போயிருந்தீங்க இவ்வளவு நேரம்.

வேலா : சேர்மன் வீட்டு வரைக்கும் போயிட்டு வந்தேன். வாழ்க்கையே பெரிய சுமைன்னு நெனச்சு போன எனக்கு புதுவழி காட்டினாரு அந்தப் பெரிய மனுஷன். ஒவ்வொரு விவசாயிக்கும் உற்ற நண்பனை இருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியன் ஆபீஸிக்கு அனுப்பிச்சாரு. எல்லா அதிகாரிகளும் எனக்கு அறிமுகம் ஆயிட்டாங்க....டேய் ராமு உனக்கு விஷயம் தெரியுமா ? வட்டிக்கடையிலே கடனை வாங்கி கஷ்டப்பட்டுகிட்டு இருக்கிறோமே, அந்தத் தொல்லை சீக்கிரம் நம்மை விட்டுப போயிடும். பஞ்சாயத்து யூனியன் எனக்குகடன் தர்ரதுககு சேர்மனும் ஆபீஸர்களும் சேர்ந்து செஞ்சு இருக்காங்க. இத்தனை நாளும் அவங்க சொல்றதுலே நம்பிக்கை இல்லாம இருந்தது. எங்கிட்டே பண்ணையாளா இருந்த காளிமுத்துவுக்கு அரசாங்கம் கொடுக்கற பேரு கிராம சகாயக். டேய் ராமு....சோமு இன்னிலேருந்து நாம மூணு பேரும் விவசாய ஆபீஸரை பக்கத்திலே வச்சுகிட்டு விவசாயம் பண்ணுவோம். நெத்தி வேர்வை நிலத்திலே விழப் பாடுபடுவோம். அப்புறம் ஆண்டவன் விட்ட வழி. ராமுவும் சோமுவும் சரி சொல்லி தலையை ஆட்டுகின்றனர்.

லட்சுமி : வாங்க இலை போட்டாச்சு அப்புறம் சாவகாசமா பேசிக்கலாம்.

ராமு : நான் பாடுபடத் தயார் தம்பி. நீ என்ன சொல்றே.

சோமு : நானும் ரெடி. மூணு பேரும் சேர்ந்து உழைப்போம். நிச்சயம் முன்னேறலாம். அப்புறம் தான் படிப்பு.

வேலா : ராமு....சோமு வாங்கப்பா சாப்பிடப் போகலாம்.

காட்சி 8

(வீதி : சோமு, மூக்கன், செட்டியார்.)

சோமு : எண்டா மூக்கா இந்த மாதிரி பொய் சொல்லி ஊரை ஏமாத்திகிட்டு இருக்கியே நாளைக்கு உண்மை தெரிஞ்சுபோச்சுனா....

மூக்கன் : நல்லது செஞ்சா இப்படித்தான். நீ பார்த்துகிட்டே இரு. நான் சமாளிக்கிறேன்.

சோமு : அதுசரி. எண்டா செட்டியார் என்னைப் பார்த்து ஏதாவது கேட்டா....

மூக்கன் : நான் வழி சொல்லித் தரேன். சோமு ... அக்கா சாமான் வாங்க காசு கொடுக்கும். அதிலே கொஞ்சம் கமிஷன் அடிச்சு சேர்த்து வச்சேன். அப்புறம் போஸ்ட் ஆபீஸிலே பிரைஸ் பாண்டு வாங்கினா ஆயிரக் கணக்கிலே பணம் வரும்ன்னு சொன்னாங்க. சரி நாமளும் ரெண்டு வாங்குவோம்னு சொல்லி வாங்கி சாமி படத்துக்கு பின்னால் ஒளிச்சி வச்சிருக்கேன்.

சோமு : பரவாயில்லையே. புத்திசாலிடா நீ.

மூக்கன் : யாரு கண்டா. வர 1-ம் தேதி குலுக்கலிலே பிரைஸ் விழட்டும். பணத்தை அக்காகிட்டே கொடுப்பேன். அக்கா மாமா கிட்டே கொடுக்கும். நம்ம கஷ்டமெல்லாம் பறந்து போகும்.

சோமு : கண்டிப்பா உனக்கு பிரைஸ் விழும்.

மூக்கன் : நம்ம காளிமுத்து நம்ப நெலத்தை வாங்கிடம்னு துடியா நின்னான். நான் அதையும் தடுத்துபுட்டேன்.

சோமு : என்ன செஞ்சே ?

மூக்கன் : சும்மா ஒரு சிக்கல் இருக்குன்னேன். பய அசந்துட்டான்.

சோமு : பெரிய ஆளப்பா நீ—போகலாம் வா.

(செட்டியார் வருகிறார்)

செட்டி : அடேடே தம்பி எப்ப வந்தீங்க ?

சோமு : நேத்துத்தான் வந்தேன்.

செட்டி : அடடா ரொம்ப இளேச்சுட்டீங்க.

சோமு : அதெல்லாம் இல்லீங்க. உங்க பக்கத்திலே நிக்கரது அப்படி தெரியுது.

செட்டி : ம்..ம்.. நான் நம்ப மாட்டேன். ரொம்ப இளேச்சுட்டீங்க.... இல்லே மூக்கா.

மூக்கன் : ஆமாங்க.

செட்டி : என்ன தம்பி பணமெல்லாம் பத்திரமா கொண்டு வந்துட்டீங்களா ?

சோமு : பணமா.... பணம்.

செட்டி : அதுதான் தம்பி பிரைஸ் பணம்.

மூக்கன் : அது பாங்குலே போட்டிருக்கு. அது ஊர் மாறி வர 1 மாசம் ஆகும்.

செட்டி : வரட்டும்.... வரட்டும்.... மெதுவா வரட்டும்.

மூக்கன் : செட்டியாரே சீக்கிரம் வீடு போயி சேருங்க. மழை வரும்போல இருக்கு.

சோமு : மழை புடிச்சாலும் புடிச்சுடும்.

செட்டி : வர்றேன் தம்பி.... மூக்கா தம்பியைப் பாத்துக்க. பணம் வந்த உடனே தகவல் கொடுத் தனுப்பு.

மூக்கன் : ஆகட்டும்.. ஆகட்டும்.

(செட்டியார் போகிறார்)

சோமு : அப்பாடா.... என்ன மூக்கா அப்பா கிட்டே போயி செட்டியார் கேட்டா என்னடா செய்யறது....

மூக்கன் : ம்.... அதெல்லாம் சரிப்பண்ணி வச் சிருக்கேன். மழை வரப்போகுது வா போகலாம்.

காட்சி 9

இடம் : தோட்டம்.

பாத்திரங்கள் : சோமு ராமு, லட்சுமி, விவசாய விளக்குனர் முதலியோர்.

(சோமு பந்தல்கால் ஒன்றைச் செதுக்கிக் கொண்டிருக் கிறான். ராமு உள்ளே நுழைகிறான்).

ராமு : (வந்து கொண்டே) டேய் சோமு என்ன பண்ணி கிட்டிருக்கே.

சோமு : காலேஜு திராட்சைக் கொடி அனப்-இ-ஷாஹி கொண்டு வந்து நம்ம டெமான்ஸ்டிரேட்டர் கொடுததார். அதுக்கு பந்தல்போட, கால் வெட்டி கிட்டிருககேன்.

ராமு : (கொஞ்சம் வருத்தத்துடன்) தம்பி ! நீ எங்கிட்டே சொன்னேன்னு அதை நான் செய்ய மாட்டேனு ? உனக்குப் பழக்கமில்லாத வேலையை நீ செய்யலாமா. கொண்டா நான் வெட்டி நடுறேன்.

சோமு : இல்லே அண்ணு நானே....

ராமு : எங்கே.... உன் கைகளைக் காட்டு.
(சோமு தயக்கத்தோடு கைகளைக் காட்டுகிறான்).

ராமு : அய்யோ.... கையிலே கொப்புளம் வந்துடுச்சே.. (மிகுந்த வருத்தத்தோடு பெருமூச்சு விட்டு) தம்பி .... இனிமேல் இந்த மாதிரி வேலையை நீ செய்யா தேப்பா. நீ கஷ்டப்படுறதை என்னுலே பார்த்துகிட்டு இருக்க முடியாதுப்பா.

சோமு : என்னண்ணு அப்படிச் சொல்றீங்க. என் உடம்புலே ஓடற ரத்தமும், உங்க உடம்புலே ஓடற ரத்தமும் ஒண்ணுதானே அண்ணு. நீங்க கஷ்டப் படுறதை மட்டும், நான் பார்த்துகிட்டு இருக்க முடியுமா....

ராமு : சொன்ணு அதுக்கு அதுக்கு பதில் சொல்லிடுறே.
(லட்சுமி உள்ளே நுழைகிருள்)

ராமு : (லட்சுமியைப் பார்த்து) பாத்தேயா புள்ளே நம்ம சோமு கையிலே எவ்வளவு பெரிய கொப்புளங்கள் இருக்குன்னு. நம்ம தரித்திரம். கஷ்ட காலம் இதையெல்லாம் பார்க்கச் சொல்லுது.

லட்சுமி : தம்பி நீங்க கஷ்டப்படுறது அவர் மனசுக்கு எவ்வளவு வேதனையக் கொடுக்குதுன்னு பார்த் தீங்களா போங்க தம்பி வீட்டுக்கு.

சோமு : இல்லே அண்ணி. நான் சொல்றதையும் கொஞ்சம் கேளுங்க. படிச்சுட்டு படாடோபமாத் திரிஞ்ச வரைக்கும் விவசாயததை சாதாரணமா நெனச் சிருந்தேன். ஆனுல் கலப்பையை பிடிச்சப்போதான் அதனுடைய கஷ்டம் தெரிஞ்சுச்சு. வெய்யில்லே காஞசப்போதான் அதனுடைய வேதனை தெரிஞ்சுது. அண்ணு நான் சொல்றேனேன்னு வருத்தப்படாதீங்க. கஷ்டப்பட்டாதான் ஒரு மனுஷன் முன்னேற முடியும், அப்படி கஷ்டப்பட்டு முன்னேறுவதைத்தான் நான் விரும்புகிறேன்.

ஏ.இ.ஓ. : (உள்ளே நுழைந்து கொண்டே) : சபாஷ் சோமு சபாஷ்.... நல்லாச் சொன்னீங்க.

ராமு : வாங்க சார்.... வாங்க.... (தயக்கத்தோடு) தம்பிக்கு ஒரு கஷ்டமான வேலையைக் கொடுத் துட்டீங்களே சார். என்கிட்டே சொல்லியிருந்தீங்கன்னு திராட்சைக் கொடிக்கு நானே பந்தல் போட் டிருப்பேனே....

ஏ.இ.ஓ. : அப்படிச் சொல்லாதீங்க ராமு. பண்ணையின்னு இருந்தா அங்கே குடும்பத்திலே இருக்கிற எல்லாரும் பாடுபடனும். அப்போதான் நல்லது....

சோமு : நல்லா சொல்லுங்க சார். நான் வேலை செய் யறது இவங்களுக்குக் கஷ்டமாக இருக்குதாம்.... (அண்ணனைப் பார்த்து) அண்ணு ஒரு விஷயம் தெரியுமா உங்களுககு ?

ராமு : என்னப்பா ?

சோமு : நம்ம தோட்டதது மண்ணுமேடு இருக்கில்லே. அங்கே ஒரு பெரிய குழி தோண்டியிருக்கோம்.

ராமு : குழி தோண்டியிருக்கேயா.... !

சோமு : ஆமாண்ணு.... கம்போஸ்டு குழி எருக்குழி.... நம்ம டெமான்ஸ்டிரேட்டர்தான் அதுக்கு யோசனை சொன்னுர்.

ராமு : அப்படியா....

சோமு : ஆமா அண்ணு நம்ம டெமான்ஸ்டிரேட்டர். நம்ம கூடவே இருந்து எல்லா வேலைகளிலேயும் உதவி செய்யுருரு.

ராமு : என்னமோ, நம்ம மேலே ஒரு நல்ல எண்ணம். அதனுலே அப்படி....

ஏ.ஆ.ஓ. : அதுமட்டுமில்லீங்க. ஒவ்வொரு விவசாயியையும் சந்திச்சு அவங்களுக்கு வேண்டிய உதவி செய்யுற துக்குத்தான் நாங்க இருக்கிறோம். நம்ம பஞ்சாயத்து யூனியன்லே டண்ணே உற்பத்தித் திட்டம், கிராம உற்பத்தித் திட்டம் எல்லாம் வகுக்குறோம்.... வேண்டிய ஏற்பாடு செய்யுறோம். ராமு சௌகர்யப் படும்போது நம்ம ஆபீசுக்கு வாங்க. எல்லாம் விவர மாகச் சொல்றேன். விளங்கும். நான் போயிட்டு வரட்டுமா....

ராமு, சோமு, (வணங்கி) சரி போயிட்டு வாங்க சார்.

(திரை)

1964-ம் ஆண்டு ஜனவரி மாதத்திய காலநிலை அறிக்கை

(சி. பாலசுப்ரமணியன், சி. ரங்கநாதன், விவசாய காலநிலை ஆராய்ச்சிப் பிரிவு, கோவை).

இம் மாதம் முதல் இருபத்திமூன்று நாட்களில் தமிழ் நாட்டில் பொதுவாக வரட்சிநிலை நிலவியது. 24, 25-ம் தேதிகளில் தமிழகத்தின் தென் பகுதிகளில் மட்டும் ஆங்காங்கு சிறிது மழையிருந்தது. அதன் பின்னர் இம் மாதக் கடைசிவரை காலநிலை வரட்சியாகவேயிருந்தது.

இம் மாதத்தில் 10-ம் தேதி முதல் 20-ம் தேதிவரை தமிழ்நாட்டில் இரவு வெப்பநிலை சராசரிக்கு குறைந்திருந்தது. ஆனால் 16, 19-ம் தேதிகளிலும், ஏனைய நாட்களிலும் இரவு வெப்பம் சீராகவேயிருந்தது.

இம் மாதத்தில் குறிப்பிடத் தக்க மழையளவுகள் இல்லை.

காலநிலையும் பயிர் வளர்ச்சியும்

செங்கற்பட்டு, தென் ஆற்காடு, வடஆர்காடு மாவட்டங்களில் இம்மாதம் மழையில்லை. திரூர் பகுதிகளில் கார்த்திகை சம்பா, நேர் சம்பா நெற்பயிர்களில் இலைப் புள்ளி நோயும், குடியாத்தம் பகுதியில் கரும்பில் துளைப்பான்களும், மாவுப் பூச்சிகளும் காணப்பட்டன. பாலூர் பகுதியில் சம்பா நெல் அறுவடைக்கு வந்தது. திண்டிவனத்தில் எள்பயிரை இலைப்புழுக்கள் கடுமையாகத் தாக்கின.

தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் இம்மாதம் மழையில்லை. ஆடுதுறைப் பகுதியில் நெற்பயிரை கொள்ளை நோயும், இலைப்புள்ளி நோயும், குறுத்துப் பூச்சிகளும் வெகுவாகத் தாக்கின. மன்னார்குடி பகுதியில் சம்பா நெல் அறுவடைக்கு வந்தது. இங்கு எலிகளினால் நெற்பயிருக்கு பெரும் சேதம் ஏற்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பாம்பன் பகுதியில் மட்டும் சிறிது மழை பெய்தது. மற்ற இடங்களில் பொதுவாக வரட்சி நிலவியது. திருநெல்வேலி மாவட்டத்தின் தென் பகுதியில் சுமாரான மழை பெய்தது. கோயில்பட்டியில் சோளப் பயிரை குறுத்துப் பூச்சிகளும், கதிர் வண்டுகளும், இலைப்புள்ளி நோயும் மென்மையாகத் தாக்கின. பருத்தியில் தத்துப் பூச்சியும், அசுவும், கருங்கிளை நோயும் வெகுவாகக் காணப்பட்டன. மிளகாய்ப் பயிரில் சிறிதளவு திரிப்சும் (Thrips), அழுகல் நோயும் காணப்பட்டன.

மதுரை, கன்னியாகுமரி மாவட்டங்களில் மழையில்லை. உசிலம்பட்டி பகுதியில் மட்டும் இலேசான மழையிருந்தது. இங்கு திராட்சை, மா, மிளகாய் பயிர்களில் சிறிதளவு சாம்பல் நோயும், நெற்பயிரில் கதிர் வண்டுகளும், பருத்தியில் காய்ப்புழுக்களும் காணப்பட்டன.

நீலகிரி, சேலம், கோயமுத்தூர் மாவட்டங்களிலும் இம் மாதம் மழை பெய்யவில்லை. நீலகிரியின் கிழக்கு பகுதியில் கடுமையான மூடுபனியினால் உருளைக் கிழங்கு பயிர் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. கோவை மாவட்டத்தில் ஈரோடு தாலுக்காவில் நிலக்கடலை விதைப்பும், ராகி நடவும், சம்பா நெல், நிலக்கடலை அறுவடையும் மேற்கொள்ளப்பட்டன. இங்கு நெற்பயிரில் இலைப்புள்ளி நோயும், குறுத்துப் பூச்சிகளும் வெகுவாகக் காணப்பட்டது. பல்லடம், அவனாசி தாலுகாக்களில் சோளம், கம்பு, கொள்ளு, நிலக்கடலை, கொத்தமல்லி, பருத்தி முதலியன அறுவடைக்கு வந்தன. ராகி நடவும் இம் மாதத்தில் நடைபெற்றது. இப் பகுதிகளில் சோளப் பயிரை குறுத்துப் பூச்சிகளும், பருத்தியை அசு, காய்ப்புழு, மாவுப் பூச்சிகளும் கடுமையாகத் தாக்கின. சேலம் மாவட்டதில் நாமக்கல் பகுதியில் சம்பா நெல் அறுவடையாயிற்று. கார்நெல் நடவுக்கு வந்தது.

சோளம், கம்பு, ராகி, நிலக்கடலை விதைப்புக்கு வந்தன. நெற்பயிரில் பெருமளவு கொள்ளை நோயும், தத்து பூச்சிகளும், குறுத்துப் பூச்சிகளும், கதிர் வண்டுகளும் காணப்பட்டன. ராகியில் வெட்டுப் புழுக்களும், பருத்தியில் கருங்கிளை நோயும், காய் அழுகல் நோயும் அதிக அளவில் காணப்பட்டது. அசுவும், நாவாய்ப் பூச்சிகளும், காய் புழுக்களும் மிதமாகக் காணப்பட்டன.

இம்மாதத்திய பிராந்திய மழையளவுகள் பின் வருமாறு :—

பிராந்திய மழையளவு (அங்குலத்தில்)

பிராந்தியத்தின் பெயர்.	இம்மாத மழையளவு.	சராசரியிலிருந்து மாறுபாடு.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)
வட பிராந்தியம் ..	இல்லை	— 1·7	குறைவு
கீழ்ச்கரை பிராந்தியம் ..	இல்லை	— 2·2	குறைவு
மத்திய பிராந்தியம் ..	இல்லை	— 0·5	குறைவு
தென் பிராந்தியம் ..	0·3	— 1·6	குறைவு
மலை பிராந்தியம் ..	இல்லை	— 2·0	குறைவு

1964-ம் ஆண்டு ஜனவரி மாதக் காலநிலை அறிக்கை.

மழையளவு (அங்குலத்தில்).

இடத்தின் பெயர்.	இம்மாதத்தின் மொத்த மழையளவு.	சராசரியிலிருந்து மாறுபாடு.	ஜனவரி 1-ம் தேதி முதல் மொத்த மழையளவு.
(1)	(2)	(3)	(4)
வட பிராந்தியம்			
சென்னை (மீனம்பாக்கம்).	இல்லை	— 1·4	இல்லை
திரூர்குப்பம்* ..	இல்லை	— 1.8	இல்லை
வேலூர்	இல்லை	— 1·5	இல்லை
குடியாத்தம்* ..	இல்லை	— 2.2	இல்லை
கீழ்க்கரைப் பிராந்தியம்			
பாலூர்*	இல்லை	— 2·1	இல்லை
திண்டிவனம்* ..	இல்லை	— 1 4	இல்லை
கடலூர்	இல்லை	— 2.4	இல்லை
நாகபட்டினம் ..	இல்லை	— 2.7	இல்லை
ஆடுதுறை*	இல்லை	— 2·1	இல்லை
பட்டுக்கோட்டை* ..	இல்லை	— 2.5	இல்லை
மத்திய பிராந்தியம்			
சேலம்	இல்லை	— 0.3	இல்லை
கோயமுத்தூர்* ..	இல்லை	— 0·3	இல்லை
கோயமுததூர் ..	இல்லை	— 0 6	இல்லை
திருச்சிராப்பள்ளி ..	இல்லை	— 0 8	இல்லை
தென் பிராந்தியம்			
மதுரை	இல்லை	— 0·8	இல்லை
பாமபன்	0.8	— 1 8	0.8
கோயில்பட்டி* ..	0.2	— 1·6	0.2
பாளையக்கோட்டை ..	†	— 1.7	†
அம்பாசமுத்திரம்* ..	1·3	— 3 0	1·3
நாகாகோயல்* ..	இல்லை	— 1.0	இல்லை
கன்னியாகுமரி* ..	இல்லை	— 1.5	இல்லை
மலைப் பிராந்தியம்			
கொடைக்கானல் ..	இல்லை	— 3 2	இல்லை
கூனூர்*	இல்லை	— 3 5	இல்லை
உதகமண்டலம்* ..	இல்லை	— 0·8	இல்லை
நஞ்சநாடு*	இல்லை	— 0.6	இல்லை

* சென்னை விவசாய இலாகாவின் ஆராய்ச்சிப் பண்ணைகள். † 0·02.

விழாவை ஒட்டி நடைபெற்ற "காய்கறி அணிவகுப்பு" காட்சி.

உலக சைவ உணவு உண்ணுவோர் மாநாட்டில் காய்கறி சொல்லும் பொம்மலாட்டக் காட்சி.

மதுரையில் நடந்த வீட்டுத்தோட்டப் போட்டி பரிசளிப்பு விழாவில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. டி. வி. அந்தோணி, I.A.S. தலைமை உரையாற்றுதல்.

Registered No. M-4646.

©
தமிழ்நாடு அரசாங்கம்
1964

மதுரையில் வீட்டுத் தோட்டப் போட்டி பரிசளிப்பு விழா.



மதுரை நகர வீட்டுத் தோட்டக் கமிட்டி தலைவர் திருமதி. வில்லி பிரபாகர், கண்காட்சியைத் துவக்கி வைத்தல்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, மதுரை விவசாய அலுவலர் காட்சிப் பொருட்களை விளக்குதல்.

சிறிய வீட்டுத் தோட்டங்களுக்கான போட்டியில் முதல் பரிசை திருமதி. எஸ். டி. பால் அம்மையாருக்கு திருமதி. அந்தோணி வழங்குதல்.

தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு விவசாயச் செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு விவசாயத்துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.